நெல்லுடைக்கும்'
மா அரைக்கும் இயந்திர
உதிரிப்பாகங்கள்
மற்றும்
பொலித்தீன்,
கேக், குளிர்பான
தயாரிப்புக்களுக்கு
ராஜூ
ஸ்ரோர்ஸ்
67, 69, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5-00

கைக்கடிகாரம்!
அழகுசாதன, அன்பளிப்பு
எவர்சில்வர்,
விளையாட்டுப்
பொருள்களுக்கு
நாடுங்கள்!
ராஜூ
ஸ்ரோர்ஸ்
67, 69, கஸ்தூரியார்வீதி.
யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 வைகாசி 04 வியாழக்கிழமை (18 05 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 172

விடுதலைபுலிகளிடம் மிக நவீன நீர்மூழ்கி?

பருத்தித்துறை கடலில் சோதனை ஓட்டமாம்

கொழும்பு, மே 18

பருத்தித்துறைக்கு அப்பால் உள்ள கடலில் — ஆறு பேருடன் செல்லக்கூடிய — பலம் வாய்ந்த — மிக வேகமான — மிக நவீன — நீர்மூழ்கிக் கப்பல் ஒன்று இருப்பது அயல் நாடு ஒன்றின் கடற்படை நீர்மூழ்கிக் கப்பலின் ஒலி வாங்கியால் [Sonar] கண்டு பிடிக்கப்பட்டுள்ளது என்று பந்தோபஸ்து வட்டாரங்கள் தெரிவித்தன.

''த ஐலண்ட்'' ஆங்கிலத் தினசரி இது சம்பந்தமான செய்தியை வெளியிட்டுள்ளது.

இந்த அயல்நாட்டு நீர்மூழ்கிக் கப்பல் அந்நாட்டின் கடல் பிரதேசத்தில் வழமையான வேவு வேலையில் ஈடுபட்டபோதே இது தெரிய வந்தது எனக் கூறப்படுகிறது.

விடுதலைப் புலிகள் வாங்கியுள்ளதாகச் சந்தேகிக்கப்படும் இந்த மர்ம நீர்மூழ்கிக் கப்பலைக் கண்டுபிடித்தவுடன், சம்பந்தப்பட்ட நாட்டின் உளவுப்பிரிவு ஸ்ரீலங்காப் பாதுகாப்பு வட்டாரங்களுக்கு அதனை அறிவித்தது எனவும் —

அந்த நாடும் அதன் கண்காணிப்பைத் தீவிரப்படுத்தி

[6 ஆம் பக்கம் பார்க்க]

இராணுவ அதிகாரிகள் 75 பேர் பயிற்சியின் போது தப்பி ஓட்டம்!

தேடிக் கண்டுபிடிக்க அவசர நடவடிக்கை

கொழும்பு, மே 18

கே.டி.ஏ. எனப்படும் கொத்தலாவல பாதுகாப்பு அக்கடமியைச் சேர்ந்த சுமார் 75 இராணுவத்தினர் இராணுவப் பயிற்சி முகாமில் இருந்து தப்பி ஓடிவிட்டனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தப்பியோடியவர்களைத் தேடிக் கண்டு பிடிக்கும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

தப்பியோடியவர்களில் சிலர் பின்னர் தாமாகவே திரும்பி வந்து சரணடைந்துள்ளனர். அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவ அதிகாரிகளுக்கான பயிற்சியை பெற்று வந்தவர்களே பயிற்சி முகாமை விட்டுத் தப்பியோடியுள்ளனர்.

கொத்தலாவல பாதுகாப்பு அக்கடமியில் பயிற்சி பெறும் படையினர் அங்கிருந்து நேரடியாக யுத்த முனைகளுக்கு அனுப்பப்படுவது வழக்கமாகும்

மீண்டும் மோதல்கள் வெடித்திருப்பதை அடுத்து படையில் இருந்து இராணுவத்தினர் தப்பியோடும் சம்பவங்கள் அதிகரித்திருப்ப

[6ஆம் பக்கம் பார்க்க]

தமிழர்களின் 100 வீடுகள் தீக்கிரை! அதிரடிப்படையினர் அட்டகாசம்!!

பொத்துவில் பகுதியில் சம்பவம்

கொழும்பு, மே. 18

அம்பாறை மாவட்ட பொத்துவில் பகுதியில் உள்ள இன்ஸ்பெக்டர் ஏற்றம் என்ற கிராமத்தில் உள்ள நூறுக்கும் மேற்பட்ட வீடுகள் கடந்த சனிக்கிழமை பிற்பகல் 4-45 மணியளவில் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

பொலீஸ் நிலையம் அமைந்துள்ள இடத்துக்கு சமீபமாகவுள்ள வீடுகளே தீக்கிரையாகியுள்ளன

அப்பகுதி மக்கள் தாக்குதலுக்கும் உள்ளாகியுள்ளனர்.

அன்று பிற்பகல் 4. 30 மணியளவில் அம்பாறையின் பொத்துவிலில் இருந்து இன்ஸ்பெக்டர் ஏற்றம் பகுதி காவலரண்களுக்கு காவல் கடமைக்கென வந்த விசேட அதிரடிப் படையினரில் ஒருவர் பம்குழி என்ற இடத்தில் மிதிவெடியில் சிக்கி காலை இழந்தார்.

இதனால் கோபமடைந்த விசேட அதிரடிப் படையினர்

[6 ஆம் பக்கம் பார்க்க]

பொ.ஐ.மு. அரசுக்கு எதிராக ஐ.தே.க. நம்பிக்கையில்லாப் பிரேரணை?

கொழும்பு, மே 18

பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வருவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது.

நாட்டினதும், மக்களினதும் பாதுகாப்புக்கு ஊறு விளைவித்தமை மற்றும் மின்சார சபையின் களனிதிஸ்ஸ மின்சக்தி நிலையத்துக்கு அருகில் அமைக்க உத்தேசித்துள்ள 150 மெஹவாட் மின் உற்பத்தி நிலையத்துக்கான ஒப்பந்தத்தை இங்கிலாந்தில் உள்ள மிட்லண்ட் தொழில்நுட்ப நிறுவனத்துக்கு வழங்கியமை ஆகிய காரணங்களை முன்வைத்தே அரசின் மீது நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வர ஐ. தே. க. முயற்சி எடுத்துள்ளது.

புலிகளுக்கு மருந்துவகை ஏற்றி வந்த ரகசிய கப்பல் குறித்து விசாரணை!

கொழும்பு, மே 18

விடுதலைப் புலிகளுக்கு மருந்து வகைகளை ஏற்றி வந்ததாகக் கூறப்படும் ரகசிய கப்பல் ஒன்று தொடர்பாக மேல் விசாரணை ஒன்று கடந்த 16 ஆம் திகதி ஆரம்பிக்கப் பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீ ''-எக்ஸலண்ட்'' என்ற அந்தக் கப்பல் கனடாவில் இருந்து கடந்த எட்டாம்திகதி இலங்கை வர புறப்பட்டது எனினும் கடந்த 16 ஆம்திகதி வரை அது இங்கு வந்து சேரவில்லை எனவே அதற்குஎன்ன நடந்தது என்பது தெரியவில்லை. அது குறித்தே தற்போது விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது —என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது

கொழும்பு துறைமுகத்துக்கு வந்த கப்பல்களின் விவரங்கள் குறித்து முதலில் ஆராயப்பட்டுள்ளது.

அந்தக்கப்பல் தனதுவழியை மாற்றி வடக்குக்கு சென்றுள்ளதா அல்லது பெயரையும் நிறத்தையும் மாற்றிக் கொண்டு கொழும்பு வந்ததா என்பதைக் கண்டறியும் முயற்சியில் பாதுகாப்பு அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். [ஐ-5]

பீடாதிபதி வீட்டுக்கு கல்வீசிய செயல் அநாகரிகமானது; மனித நேயமற்றது!

நடவடிக்கை எடுக்கப்படும் என காவல்துறை அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 18

மருத்துவபீடாதிபதியின் வீட்டுக்குக் கல்வீசிய செயல் அநாகரிகமானது; மனித நேயமற்றது. இத்தகைய செயலைப் புரிவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

— இவ்வாறு தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் திரு. பா நடேசன் அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார். நேற்று அவர் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இன்றைய எமது விடுதலைப் போராட்டம் ஒரு புதிய வரலாற்றுத் திருப்பத்தை எதிர்கொண்டு நிற்கின்றது. இந்த விடுதலை யுத்தத்தில் சிங்கள [illegible]

[6 ஆம் பக்கம் பார்க்க]

வடமராட்சி பகுதிகள் மீது அகோர ஷெல் தாக்குதல்!

6 வயோதிபர் உட்பட 10 பேர் காயம் ஐயாயிரம் மக்கள் இடம்பெயர்வு

வடமராட்சி, மே 18

பலாலி படைத் தளத்தில் நிலைகொண்டுள்ள படையினர் நேற்றுக் காலை முதல் நண்பகல் வரை அச்சுவேலி மற்றும் வடமராட்சிப பகுதி முழுவதையும் நோக்கி அகோர ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

இந்தச் ஷெல் தாக்குதல்களினால் ஆறு வயோதிபர்கள், இரண்டு சிறார்கள் உட்பட பத்துப் பேர் படுகாயமுற்றனர்.

கடும் ஷெல் வீச்சுக் காரணமாக அச்சுவேலி, தொண்டமானாறு பகுதிகளைச் சேர்ந்த ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்தனர்.

காலை முதல் மாலை வரை சிறு இடைவெளிகளுடன் நடைபெற்ற ஷெல் தாக்குதல்களினால் பல வீடுகள் சேதமுற்றன. இரண்டு கடைகள் நாசமாகின; பயன்தரு மரங்களும் சேதமுற்றன.

நேற்றுக் காலை 8 00 மணி முதல் நண்பகலுக்குச் சற்று முன்னர் வரை கடும் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

அச்சுவேலி, நாவற்காடு, கொலனி, அச்சுநகர்தோப்பு, பத்தைமேனி, கதிரிப்பாய், தம்பாலை, இடைக்காடு, வளலாய், கட்டுவன், குரும்பசிட்டி, புன்னாலைக் கட்டு

[6 ஆம் பக்கம் பார்க்க]

கோமாரி வந்தது

யாழ்ப்பாணம், மே. 18

தனியாருக்கான ஒரு தொகுதி பொருட்களுடன் 'கோமாரி' கப்பல் நேற்று காலை பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்தது.

சீனி, பிண்ணாக்கு, பருப்பு தேங்காய் எண்ணெய், உருளைக் கிழங்கு, தீப்பெட்டி சவர்க்காரம், லசக்கிள் ரயர் ரியூப் என்பன இக்கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளன. பொருட்களை இறக்கும் வேலை நேற்று ஆரம்பமாகின.

(ஐ-4-173)

சிப்பாயின் சடலம் திருமலைக்கு

வடமராட்சி மே 18

செவ்வாய்க்கிழமை ஆனையிறவில் நடந்த மோதலில் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்ட இராணுவச் சிப்பாய் ஒருவரின் சடலம் நேற்று ''சீ டானலர்'' கப்பல் மூலம் திருமலைக்கு அனுப்பப்பட்டது.

விடுதலைப்புலிகளால் செஞ்சிலுவைச்சங்கசர்வதேசக் குழுவிடம் இச்சடலம் ஒப்படைக்கப்பட்டிருந்தது

''சீ டான்லர்'' கப்பலில் கொழும்பில் சிகிச்சை பெறுவதற்கென 13 நோயாளர்களும் செல்கின்றனர். வெளியூர் தபால் பொதிகளும் அக்கப்பலில் எடுத்துச் செல்லப்பட்டன. [ஐ-173]

பாகிஸ்தானில் இருந்து ஏவுகணை?

கொழும்பு, மே. 18

தமிழீழ விடுதலைப் புலிகள் விமான எதிர்ப்புஆயுதங்களை பாகிஸ்தானிடம இருந்துபெற்றிருக்கலாம் என சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது

இந்த ஏவுகணைகள்- அமெரிக்காவால் பாகிஸ்தானுக்கு வழங்கப்பட்ட ஆயுதங்களின் ஒரு பகுதியென விஷயம் அறிந்த உயர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன என்றும் அச்செய்தியில் கூறப்பட்டது.

(உ-14)

அளவெட்டிப் பகுதியிலும் தாக்குதல்!

அளவெட்டி. மே 18

அளவெட்டிபத்தானைப் பகுதியில் நிலை கொண்டிருந்த படையினர் நேற்று பகல் முழுவதும் விட்டு விட்டு குடியிருப்புப் பகுதிகளை நோக்கி கடும் ஷெல் தாக்குதல்களை நடத்தினர். இதனால் வயோதிபர் ஒருவர் காயமுற்றார். பலவீடுகள் சேதமுற்றன. பெரும் எண்ணிக்கையான மக்கள் இடம் பெயர்ந்தனர்.

அளவெட்டிதெற்கு. தம்பனை, ஸ்ரீ நாகவரதநாராயணர் ஆலயச் சூழல் ஆகியவற்றில் ஷெல்கள் விழுந்து வெடித்தன. இதனால் பல வீடுகள் சேதமடைந்தன, நான்குமாடுகள் காயமடைந்தன.

பிற்பகல் 3 00 மணியளவில் விழுந்து வெடித்த ஷெல்லினால் அளவெட்டி வீதியால் வந்துகொண்டிருந்த — அளவெட்டி செட்டி சோலையைச் சேர்ந்த — சின்னையா நடராஜா (வயது 61) என்பவர் காயமுற்றார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேசமயம் நேற்று அளவெட்டிப் பகுதியில் —

விறகு வெட்டவும், வீடுகளைப்பார்க்கவும் மாடுமேய்க்கவும் சென்ற பலரை இராணுவம் பிடித்து வைத்திருந்ததாகவும் —

அவர்களில் சிலரை நையப்புடைத்த பின்னர் நேற்று பிற்பகலில் படையினர் விடுவித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது

(உ-13)

இலங்கைக்கு ராணுவ உதவி வழங்க இந்தியா குறுகிய காலத் திட்டம்?

விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போராட ஸ்ரீலங்கா அரசுக்கு உதவி செய்யும் வகையில் ஒரு குறுகியகால நடவடிக்கைத் திட்டத்தை வகுக்கும் தறுவாயில் இந்தியா இருப்பதாக பி.பி.ஸி. தெரிவித்தது.

இந்தியப் படைகள் நேரடியாக ஈடுபடமாட்டாது என்ற போதிலும் புலிகளுக்கு எதிராக கொழும்பு அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு இந்தியா ஆதரவு நல்கக்கூடும்.

கடந்த செவ்வாய் இரவு பிரதமர் நரசிம்மராவ் இலங்கைப் பிரச்சினை குறித்து தமது ஆலோசகர்களுடன் ஆலோசனை கலந்துள்ளார்.

ஓர் இடைக்கால ஏற்பாடாக பிரிட்டன் அல்லது அமெரிக்காவிடமிருந்து பொருத்தமான இராணுவத் தளபாடங்களைப் பெறுமாறு இந்தியா ஸ்ரீலங்காவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது. ஸ்ரீலங்காப் படையினருக்கும் பயிற்சிவழங்கவும் சில தெரிந்தெடுத்த இராணுவத் தளபாடங்களை வழங்கவும் இந்தியா இணங்கக்கூடும் — இவ்வாறு பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது.

(உ-4)

பிரபாவைக் கைது செய்ய சட்டப்படி நடவடிக்கை!

இந்திய அமைச்சர் அறிவிப்பு

சென்னை, மே 18

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாகத் தேடப்படும் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனைக் கைது செய்வதற்கு இந்தியச் சட்டப்படி தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக —

வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணப் முகர்ஜி, நேற்று மாநிலங்கள் அவையில் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் தலைவரையும், அவரது சகபாடிகளையும் நாடு கடத்திக் கொண்டு வருவதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஏஜன்சிகள் மூலம் செய்வது குறித்து இந்திய அரசு

(6 ஆம் பக்கம் பார்க்க)

வல்வைக் கடலில் கைதான இரு மீனவர்கள் விடுவிப்பு

வடமராட்சி, மே 18

வல்வெட்டித்துறை ஆதிகோவிலடி கடல் பகுதியில் வைத்து கடந்த மாதப் பிற்பகுதியில் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இரு மீனவர்கள் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியைச் சேர்ந்த துரைசாமி சிவலிங்கம் (24 வயது), இரத்தினசாமி [illegible] (28 வயது) ஆகிய இருவரும் [illegible] பட்டவர்களாவர்.

கொழும்பில் சிகிச்சை பெற வேண்டிய நோயாளர்களை ஏற்றிச் செல்வதற்காக நேற்றுக் காலை திருகோணமலையிலிருந்து பருத்தித்துறைக்கு வந்துசேர்ந்த ''சீ டான்ஸர்'' கப்பல் நேற்று உடனடியாக கடற்படையினரால் காங்கேசன்துறைக்கு அழைக்கப்பட்டது.

அக்கப்பலிலிருந்த - சிறுவர் பாதுகாப்பு நிதிய — பிரதிநிதிகளான மூன்று பயணிகளும் இறக்கப்படாமலேயே கப்பல்

[6ஆம் பக்கம் பார்க்க]

பாணந்துறையில் நின்ற மர்ம அம்புலன்ஸ் வண்டி!

கொழும்பு, மே 18

''அம்புலன்ஸ்'' வண்டி ஒன்றைத் தேடி பொலீஸார் கொழும்பில் வலை விரித்துள்ளனர்.

பாணந்துறை வைத்திய சாலைக்கு அருகே நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் சந்தேகத்திற்கு இடமான வகையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அம்புலன்ஸ் வண்டியையே கொழும்பில் பொலிஸார் தேடி வருகின்றனர்.

இந்த அம்புலன்ஸ் வண்டி பாணந்துறை வைத்திய சாலைக்கு அருகே நிறுத்தப்பட்டிருந்த போதிலும் அது அந்தப் பகுதியிலுள்ள எந்தவொரு வைத்திய சாலைக்கும் உரியதல்ல என்பது தெரியவந்துள்ளது

வைத்திய சாலை ஊழியர்கள் சந்தேகம் கொண்டு இது பற்றி பொலீஸாருக்கு அறிவித்துள்ளனர் பொலீஸார் இந்த வாகனம் நோக்கி சென்றதும் அவ்வாகனம் உடனடியாக புறப்பட்டுச் சென்றுள்ளது.

இந்த வாகனம் யாருக்குச் சொந்தமானது. இதில் யார் இருந்தார்கள் என்பதை அறிந்து கொள்ள பொலீஸார் பொது மக்களின் உதவியை நாடியுள்ளனர். [அ-4]

கண்காட்சி

யாழ்ப்பாணம், மே 18

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஏற்பாட்டில் கண்காட்சி ஒன்று கைதடியில் உள்ள பனைவள ஆராய்ச்சி நிலையத்தில் நேற்று ஆரம்பமானது

கணினிகள், தமிழீழத்தின் போராயுதங்கள், ஐம்பதுக்கும் மேற்பட்ட நாடுகளில் உள்ள விடுதலைப் புலிகளின் சர்வதேச கிளையினரின் வெளியீடுகள் மற்றும் விடுதலைப் புலிகளின் வெளியீட்டு பிரிவினரின் ஆயிரக்கணக்கான வெளியீடுகள் என்பன இக்கண்காட்சியில் இடம்பெற்றுள்ளன.

நேற்று ஆரம்பமான இக்கண்காட்சி எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை வரை இடம்பெறும். (ஐ)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

உடற்கல்விப் போதனாசிரியர் தரம் II, தரம் III பதவிக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து (ஆணும், பெண்ணும்) விண்ணப்பங்கள் 95-06-15 ஆம் திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

சம்பள அளவுத் திட்டம்;

உடற்கல்விப் போதனாசிரியர் தரம் II
ரூபா 4,750—10x130—6,050/- மாதமொன்றுக்கு.

உடற்கல்விப் போதனாசிரியர் தரம் III
ரூபா 4,100 — 6x105 — 4,730/- மாதமொன்றுக்கு.

இத்துடன்

அ. நிலுவையிலுள்ள வேலை நிறைவேற்றப்படியாக சம்பளத்தின் 25% சதவிதத்திற்குச் சமமான தொகை 1995 ஜூன் 30 திகதி வரை கொடுப்பனவு செய்யப்படும்.

ஆ. ஒவ்வொருவருக்கும் ஆண்டு ரூபா 10,000/- படியுடன் ஆண்டுச் சம்பளத்தினதும் நிலுவையிலுள்ள பணி நிறைவேற்ற ஆண்டுப் படியினதும் 10 சதவீதமும் ஒவ்வொரு காலாண்டின் தொடக்கத்திலும் காலாண்டுத் தவணைப் புத்தகப்படியாக இத்தரத்திலுள்ள பட்டதாரிகளுக்குக் கொடுப்பனவு செய்யப்படும்.

இ. 1993 மே 12ஆம் திகதி 9/93 இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப மாதாந்தப் படியாக ரூபா 600/- செலுத்தப்படும்.

தகைமைகள்:

உடற்கல்வி போதனாசிரியர் தரம் II:

அ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் உடற்கல்விப் பட்டம் அல்லது அதற்குச் சமமான தகைமை அல்லது உடற்கல்வியில் அதைவிட உயர்ந்த தகைமையுடன் அத்தகைய பட்டத்தினைப் பெற்றதன் பின்னர் பொழுதுபோக்கு நிகழ்சித்திட்டங்களை ஒழுங்குபடுத்திச் செயற்படுத்துவதில் குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் அனுபவம்,

அல்லது

ஆ. தேசிய விளையாட்டு அணியொன்றின் அங்கத்தவராக இருந்து நாட்டின் சார்பில் விளையாட்டுக்களில் கலந்துகொண்ட அல்லது பொழுதுபோக்கு நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்குபடுத்திச் செயற்படுத்துவதில் 6 ஆண்டுகள் அனுபவமுடைய வீரமுதல்வனான பட்டதாரி.

அல்லது

இ. தேசிய அணியின் உறுப்பினராகவிருந்து உடற்கல்விப் போதனாசிரியர் தரம் III இல் 8 ஆண்டுகளுக்குக் குறையாத சேவையாற்றி 8 ஆண்டுகளுக்கு குறையாத அனுபவம் பெற்றவர்.

உடற்கல்வி போதனாசிரியர் தரம் III

அ. தேசிய விளையாட்டு அணியொன்றின் உறுப்பினராக/தேசிய வீரமுதல்வனாகவுள்ள அல்லது விளையாட்டுத் துறையில் இதர சமமான பேறுகளைப் பெற்றுள்ள அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரி (பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் முன் அனுமதியுடன்)

அல்லது

ஆ. விளையாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குபடுத்திச் செயற்படுத்துவதில் குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் அனுபவத்துடன் உடற்கல்வியில் முதலாம் வகுப்பு பயிற்றப்பட்ட ஆசிரியர் சான்றிதழ்.

அல்லது

இ. க.பொ.த. (உ.த) பரீட்சையில் ஒரே தடவையில் குறைந்தபட்சம் மூன்று பாடங்களில் சித்தியுடன் விளையாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்குபடுத்திச் செயற்படுத்துவதில் 5 ஆண்டுகள் அனுபவத்துடன் 9 மாத காலத்திற்குக் குறையாத காலப்பகுதிக்கு ஒரு கற்கைநெறியை வெற்றிகரமாக நிறைவு செய்து விளையாட்டுத் துறையில் டிப்ளோமா அல்லது அதற்குச் சமமான தகைமையைப் பெற்றிருத்தல்.

ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் 20/- ரூபாவை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிறாப்பரின் முகப்பு மேசையில் அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் செலுத்தி இப்பல்கலைக்கழக தாபனக்கிளையின் பிரதிப் பதிவாளர் அலுவலகத்தில் பெறக்கூடிய படிவங்களில் விண்ணப்பித்தல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும் விவரங்களையும் பெறவிரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளர்/நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 20/- ரூபா பெறுமதியான காசுக்கட்டளை/தபாற்கட்டளையை 23X10 ச. மீ. அளவுடைய சுயமுகவரியிட்டு 2/- ரூபா முத்திரையொட்டப்பட்ட கடித உறையுடன் அனுப்புதல் வேண்டும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுதாபனங்கள், நியதிச் சட்டசபைகள் என்பவற்றை சேர்ந்த விண்ணப்பதாரிகள் அந் நிறுவனங்களின் தலைவர்களின் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

முக்கிய குறிப்பு!

1. மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பப் படிவங்களையும் இதர விவரங்களையும் பின்வரும் விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்; யாழ்ப்பாணக் கூட்டுறவுச் சங்கம், இல. 154, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு 13.
2. உடற்கல்வி போதனாசிரியர் தரம் II பதவிக்குப் பொருத்தமான அபேட்சகர்கள் இல்லாவிட்டால் மாத்திரம் உடற்கல்விப் போதனாசிரியர் தரம் III பதவிக்கான விண்ணப்பங்கள் பரிசிலனை செய்யப்படும்.

— பதிவாளர்

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1995 - 05 - 03

[சி-1225]

கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை அதிபர் செல்வி பா. மார்க்கண்டு அவர்களின் தாயாரின் மறைவையொட்டி அவர் தம் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, தாயாரின் ஆத்ம சாந்திக்கு அனைவரும் பிரார்த்திக்கிறோம்.

ஆசியர்கள், மாணவர்கள்,
அபிவிருத்திச் சபையினர்,
பழைய மாணவர்கள்.
யா/ கோண்டாவில் இந்து ம வி. (36699)

அந்தியேட்டி அழைப்பு

இளையதம்பி கந்தையா ஆசாரி

21 - 4 - 95 அன்று புங்குடுதீவில் இறைவனடி சேர்ந்த புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த இளையதம்பி கந்தையா ஆசாரி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (19 - 5 - 95) வெள்ளிக்கிழமை வில்லூன்றி தீர்த்தக்கரையில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இவர் இளையதம்பி, முத்துப்பிள்ளையின் மகனும், தங்கலெட்சுமியின் (சின்னப்பிள்ளை) அன்புக் கணவரும், பாலச்சந்திரன், கயல்விழி ஆகியோரின் தந்தையும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் புங்குடுதீவில் நடைபெற்றன.

தகவல்,
இ. தங்கராசா (சகோதரன்)
இத்தாவில்,
பளை.

[36689]

ஓராண்டு நினைவலைகள்

செல்வரெட்ணம் தியடோர்

[சுகாதாரப் பரிசோதகர்]

வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து, எங்கள்
வாழ்விலே மகிழ்ச்சியை நிறைவாய்ச் சேர்த்து
செல்வத்துள் செல்வமாம் அனைத்தும் ஈந்து
சிறப்போடு இறைபதம் சேர்ந்து எங்கள்
சிந்தையில் எந்நாளும் நிறைந்த தந்தை
செல்வரெட் ணத்தின்நாமம் வாழி! வாழி!

மனைவி, மக்கள்

153, ஆஸ்பத்திரி வீதி,
[சென். பீற்றேர்ஸ் லேன்]
யாழ்ப்பாணம். (36694)

31-ம் நாள் நினைவலைகள்



வேலணை
அமரர்

நரசிங்கம் ஆறுமுகம் B A. அவர்கள்

(முன்னாள் சமநலச் சேவைப் பெரும்பாக உத்தியோகத்தர், D. O. A. S. கல்முனை)

மலர்வு:
14-06-1945

உதிர்வு:
18-04-1995

விண்ணுலகில் வீற்றிருக்கும்
மண்ணுலகமாமாவே
நீங்கள் இறந்துவிட்டீர்கள் என்று - நாம்
மறந்து விடவில்லை - நீங்கள்
மறைந்து போகவில்லை - எங்களில்
எங்கும் செறிந்து வாழ்கிறீர்கள்
திறம்பட கல்விபயின்று
பல்கலைக்கழகம் சென்று
கலைமாணிப்பட்டமும் பெற்றீர்கள் - நீங்கள்
கற்றவைபோல் நடந்து - எம்மை
உன்னதமானவராய் உருவாக்கினீர்கள்
உருவமாய் மரித்திரிந்து - நீங்கள்
இன்று அருவுருவமாய் அவனியில் ஜொலிக்கின்றீர்கள்
நாம் உங்களை நினைத்து உருகுகின்றோம்
தம்பி, அண்ணன், மாமா என்று - நாம்
அழைக்கும் நேரத்தில் - நீங்கள்
இங்கில்லாதது ஏனையா?

விண்ணுலகில் வீற்றிருக்கும் உங்கள் ஆத்மா சாந்தியடைய வேலணை வங்களாவடி முருகனை வேண்டுகின்றோம்.

சதாசிவம் சிவகுமாரன் குடும்பத்தினர்
இலங்கை மின்சாரசபை (ஓய்வு) (குஞ்சுமணி)
வேலணை

மலையகம்செல்லும்முக்கிய வீதிகளில் வாகனச் சோதனை நிலையங்கள்

கொழும்பு, மே 18

மலையகத்தின் முக்கிய நகரங்களின் நுழைவாயில்களில் பாதுகாப்புச் சோதனை நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன; நுழைவாயில்களில் உள்ள பாதுகாப்பு நிலையங்கள் மீண்டும் செயல்படுகின்றன.

பதுளை, பண்டாரவளை, ஹட்டன், நுவரெலியா, கண்டி, ஆகிய நகரங்களின் நுழைவாயில் காவலரண்களில் கடமையில் ஈடுபட்டுள்ள படையினரின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் தமது எல்லைக்குள் வரும் வாகனங்களையும், வெளியே செல்லும் வாகனங்களையும் நுணுக்கமாக சோதித்து வருகின்றனர்.

அதேசமயம் அட்டன், பதுளை, நுவரெலியா ஆகிய பகுதிகளில் இருந்து அவிசாவளை வழியாக கொழும்பு நோக்கி வரும் வாகனங்களும், களுவக்கல்லை, ஹோமாகம ஆகிய இடங்களில் மறிக்கப்பட்டு பொலிஸ் மற்றும் இராணுவத்தினரின் சோதனைகளுக்கு உட்படுத்தப்படுகின்றன. (ஐ 5)

புற்றுநோய் வாரம்

கொழும்பு, மே 18

எதிர்வரும் மே மாதம் 25 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை நாட்டில் புற்றுநோய் வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இலங்கை புற்றுநோய் சங்கம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளதாக சங்கத்தின் தலைவர் டாக்டர் ஜயந்த பலேகம தெரிவித்தார். (ஐ-14)

கலந்துரையாடல்

வலிகாமம் மேற்கு, மே 18

வலி. மேற்கு பிரதேச செயலக பிரிவில் கைத்தொழில்களை ஊக்குவித்தல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-175)

விளையாட்டு நிகழ்வுகள்

அரியாலை சனசமூக நிலையத்தின் 46 ஆவது ஆண்டு விழாவை ஒட்டி யாழ் உதைபந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் —15 வயதுக்குட் பட்டோருக்கான — உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் அரையிறுதியாட்டங்கள் இன்று பிற்பகல் 3.30 மணிமுதல் நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த ஆட்டங்களில் அரியாலை ஐக்கிய கழக அணியை எதிர்த்து சென். அன்ரனிஸ் வி. க. அணியும்—

பாடும் மீன் வி. க. அணியை எதிர்த்து பொற்பதி ஐ வி. க அணியும் விளையாடவுள்ளன.

★ ★ ★

சுன்னாகம் இராமநாதன் கல்லூரி இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2 00 மணிக்கு அதிபர் திருமதி சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெறும்.

வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். வைத்திய கலாநிதி (திருமதி) செங்கமலம் தெய்வேந்திரன் பரிசில்களை வழங்குவார். (உ-89)

★ ★ ★

யாழ் மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் இணுவில் சந்தை மைதானத்தில் —யாழ் மாவட்ட ரீதியில் நடத்தி வரும் பெண்களுக்கான தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3. 30 மணி முதல் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ அரியாலை சரஸ்வதி வி. க எதிர் மயிலணி வளர்பிறை வி.க.

★ இணுவில் கலாஜோதி வி. க. எதிர் உடுவில் ஐக்கிய வி. க.

★ ★ ★

சங்கானை கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கிடையே கோட்ட மட்டத்தில் நடத்தப்படும் மெய்வல்லுநர் நிகழ்ச்சிகள் நாளை பிற்பகல் 1-30 மணியளவில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

யாழ். வலயம் 2 இன் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு சு. கணபதிப்பிள்ளை பிரதம விருந்தினராகவும், தமிழீழ கல்விக் கழக இணைப்பாளர் திரு. க. அருண்மாஸ்ரர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். திருமதி ச கணபதிப்பிள்ளை பரிசில்களை வழங்குவார். (உ)

உள்ளூராட்சி தேர்தல்கள் ஒத்திவைப்பு

கொழும்பு, மே 18

உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் ஒரு வருட காலத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டன. இது சம்பந்தமான அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ அறிவித்தல் நேற்று வெளியிடப்பட்டது.

ஒத்திவைக்கப்பட்ட தேர்தல்கள் அடுத்த வருடம் ஜூன் மாதம் 30 ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைகளில் பெரும்பாலானவை ஐக்கிய தேசியக் கட்சியின் அதிகாரத்தில் உள்ளவை.

தெற்கில் பாதுகாப்பு நிலைமை மோசமடைந்துள்ளதே உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப் படுவதற்கு காரணம் என்று அரசியல் அவதானிகள் கருத்து தெரிவித்தனர். (அ)

பிற்போடப்பட்டது

பரியோவான் கல்லூரி லியோ கழகத்தினால் நடத்தப்பட்ட

"அபிமான கிரிக்கெட் நட்சத்திர போட்டி"

08-04-95 என்று படிவத்தில் குறிப்பிடப்பட்டிருந்த திகதி 08-06-95 என பிற்போடப்பட்டுள்ளது.

அன்பளிப்பு:

NORTH CEYLON TECHNICAL INSTITUTE

14, St. Peters Lane, Hospital Road.
Jaffna. (36697)

ஆண்டு 5 புலமைப்பரிசில்

அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட 95 ம் ஆண்டுக்கான (புதிய பாடத்திட்டம்) மாதிரிப் பயிற்சி வினாத்தாள்கள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

BOND யாழ்ப்பாணம்.

(36696)

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

யாழ். கோட்டம்

முக்கிய அறிவித்தல்

20-05-95 சனிக்கிழமை அன்று மாலை 3. 00 மணிக்குப் பின்னர் யாழ். கோட்டத்திற்குட்பட்ட சகல கல்வி நிறுவனங்களுக்கும் விடுமுறை பாகும்.

17-05-95 அன்று போதிய வரவின்மையால் நடைபெறாத அரசியல் துறையினரின் மிக முக்கிய கருத்தரங்கு 20-05-95 (சனிக்கிழமை) பிற்பகல் 4.00 மணிக்கு புதிய விஞ்ஞானக்கல்வி நிலையத்தில் (எழிலகம் முன்பாக) நடைபெறும்.

இதில் இயக்குநர்களும், அங்கு கற்பிக்கும் சகல ஆசிரியர்களும் தவறாது கலந்து கொள்ளல் வேண்டும்.

குறிப்பு:- இயக்குநர்கள் இதுபற்றி ஆசிரியர்களுக்கு அறிவித்து அவர்களின் கையொப்பத்துடனான சுற்றறிக்கையை வரும் போது கொண்டு வந்து ஒப்படைக்க வேண்டும்.

இதில் கலந்து கொள்ளாத நிறுவனங்கள் தொடர்ந்து இயங்க அனுமதி மறுக்கப்படும்.

சரா. புவனேஸ்வரன்
செயலாளர்
[சி/1228

கண்ணீர் அஞ்சலிகள்

அமரர்

இ. இரத்தினகோபால்

(பாலர் கல்விக்கழகத்தின் ஸ்தாபகரும், கௌரவ செயலாளரும்)

பாலர் கல்விக்கென பாங்கான சேவை செய்து
பாரினில் புகழோடு வாழ்ந்தனை — உந்தன்
சேவைதனை பொறுக்கவும் முடியாத
சே! காலனவன் கவர்ந்து சென்றனனோ!

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

இங்கனம்
பாலர் கல்விக் கழகத்தின்
கீழ் இயங்கும்
பாலர் பாடசாலை
ஆசிரியர்களும், பெற்றோர்களும்
(36695)

ஹாட்லியின் கண்ணீர் அஞ்சலி

அமரர் சுப்பிரமணியம் இரத்தினசபாபதி

(முன்னாள் அதிபர்)

கடமையிலே கண்ணியமும், வாழ்விலே எளிமையும், உள்ளத்திலே உயர்வும், கணிதத்திலே மேதாவித்தனமும், கல்லூரியின் வளர்ச்சியிலே கண்மணியுமாகி விளங்கிய முன்னாள் அதிபர் சுப்பிரமணியம் இரத்தினசபாபதி அவர்கள் தன் பூத உடலை மருத்துவ பீடத்துக்கு வழங்கி உலகுக்கு ஓர் தனியாகி இன்னுயிர் நீத்த செய்தி கேட்டு ஹாட்லி கண்ணீர் அஞ்சலி செய்து ஆத்மாசாந்திக்காக இறைவனை வேண்டுகிறது.

அதிபர், ஆசிரியர், ஊழியர்,
மாணவர், பழையமாணவர், பெற்றார்.
(சி- 1227)

உதயன்

சமீபத்திய பின்னடைவுகளினால் ஆயுத படையினர் மனம் தளரக்கூடாது

ஸ்ரீமாவோ கோருகிறார்

கொழும்பு மே 18

சமீபத்தில் ஏற்பட்ட பின்னடைவுகளால் மனம் தளர்ந்து விட வேண்டாம். துணிச்சலுடன் யுத்தத்தை முன்னெடுத்துச் செல்ல தயாராக வேண்டும்.

பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஆயுதப்படையினருக்கும் பொலீசாருக்கும் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

லண்டனில் சிகிச்சை பெற்று நாடு திரும்பிய பின்னர் நாட்டில் தோன்றியுள்ள தற்போதைய நிலை குறித்து அவர் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

விடுதலைப் புலிகள் ஒரு தலைப்பட்சமாக போர் இடை நிறுத்தத்தை முறித்துக் கொண்டதை அடுத்து அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கு பெரும் ஊறு விளைவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்திலும், கடற்படையிலும், விமானப் படையிலும் பொலிஸிலும் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

சமாதானம் எங்கள் எல்லோருக்கும் தேவை தான். ஆனால் சமாதானத்துக்கு எந்த விலையும் கொடுக்க, நாம் தயாரில்லை. புலிகள் நாட்டைப் பிரிக்க முயற்சிக்கிறார்கள்.

இப்படி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

உரிமைகளைப் பாதுகாத்து தமிழர் உயிரிழப்புகளைத் தடுக்க வேண்டும்

தி. மு. க. தலைவர் கருணாநிதி வேண்டுகோள்

சென்னை, மே 18

தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் ஆயிரக்கணக்கில் அப்பாவித்தமிழர்கள் கொல்லப்படுவதும் தடுக்கப்பட வேண்டும்,

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. மு கருணாநிதி விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் மேற்கண்டவாறு கூட்டாக வேண்டுகோள்விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

பதற்றத்துக்கான சந்தர்ப்பம் மற்றும் பழிவாங்கல் நடவடிக்கைகளுக்கு இடம் கொடுக்க வேண்டாம்

அமைதி ஏற்படும் என ஒவ்வொருவரும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த வேளையில் இரு தரப்பினருக்கும் இடையே சண்டை மூண்டுள்ளது

பொதுத்தேர்தலின் பின்னர் இலங்கையில் இரு தரப்பினரதும் அணுகு முறைகளும் கருத்துப் பரிமாறல்களும் ஒவ்வொருவருக்கும் மகிழ்ச்சியூட்டின

தமிழர்களுக்கு மனமகிழ்வைத் தரும் யுகம் தோன்றுமென்ற நம்பிக்கை இரு தரப்பினருக்குமிடையே மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை மூலம் எதிர்பார்க்கப்பட்டது

ஆனால் இப்போது எந்த நேரமும் ஏதும் நடக்கலாம் என்ற அச்சம் தோன்றியுள்ளது.

பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட தடைகள் எங்கிருந்து ஏற்பட்டன என்று தெரியவில்லை. சில சமயம் இத்தடைகளே தீர்வினைக் காண உதவும்.

வான் தாக்குதல்கள், ஏவுகணைத் தாக்குதல்கள் குறித்து செய்திகள் வருகின்றன. பத்து லட்சத்துக்கும் மேற்பட்ட தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் குறித்து அறிந்து கொள்ள முடியாமல் உள்ளது.

இவ்வாறு திரு மு கருணாநிதி மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-7)

கூட்டுறவு பரிசோதகர் மீள நியமனம்

கொழும்பு, மே 18

கடந்த காலங்களில் அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளாகி வேலை இழந்த கூட்டுறவு பரிசோதகர்கள் மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனர்.

அமைச்சரவை இந்த யோசனையை அங்கீகரித்துள்ளது. [ஐ-5]

நாய்களுக்கு தடுப்பூசி

தென்மராட்சி. மே 18

வளர்ப்பு நாய்களுக்கான விசர்நோய் தடுப்பூசி மருந்துகள் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு வந்துள்ளன.

இத்தடுப்பூசிகள் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள பொது சுகாதார பரிசோதகர் பகுதிகளில் விரைவில் வளர்ப்பு நாய்களுக்கு ஏற்றப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. [க-117]

கணித மூலவள நிலையம் திறப்பு

பருத்தித்துறை, மே. 18

புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் 162 ஆவது வருட நிறைவைக் கொண்டாடுமுகமாக எதிர்வரும் 24 ஆம் திகதி நண்பகல் 12-30 மணிக்கு கணித மூலவள நிலையம் பாடசாலை அதிபர் தலைமையில் திறக்கப்படவுள்ளது. இக்கணித மூலவள நிலையத்தினை யாழ்ப்பாணம் வடக்கு கல்விப் பணிப்பாளர் திரு க கந்தசாமி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு திறந்து வைக்கவுள்ளார் (க-118)

★ "இந்தியா ருடே" பேட்டி விவகாரம்

தேர்தலில் போட்டியிட வருமாறு சந்திரிகாவுக்கு ஜே. ஆர். சவால்!

கொழும்பு. மே 18

தம்மை ஒரு பொய்யன் என்றும், அழுக்குப் பிடித்த அரசியல்வாதி என்றும்—

ஜனாதிபதி சந்திரிகா கூறிய தன் உண்மையை அறிவதற்கு—

நாடளாவிய தேர்தல் ஒன்றில் தம்முடன் போட்டிக்கு நிற்குமாறு—

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனா சவால் விடுத்துள்ளார்.

"இந்தியா ருடே" சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் சந்திரிகா முன்னாள் ஜனாதிபதிகள் ஜே. ஆர். ஜெயவர்த்தனா, பிரேமதாசா ஆகியோரை கடும் சொற்களால் கண்டித்திருந்தார்.

சந்திரிகாவின் பேட்டி, குறித்து திரு ஜே ஆர்.ஜெயவர்த்தனாவிடம் "சண்டே ரைம்ஸ்" பத்திரிகையாளர் கருத்துக் கேட்டிருந்தார்.

அப்போதே, ஜே ஆர். மேற்கண்ட சவாலை விட்டார்.

திரு. ஜெயவர்த்தனாவின் பேட்டியில் இருந்து சில பகுதிகள் வருமாறு:-

கேள்வி: "இந்தியா ருடே"க்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா உங்களுக்கு எதிராகவும் காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாசவுக்கு எதிராகவும் கடுமையான கண்டனங்களைக் கூறியிருக்கிறார் ஓரிடத்தில் நீங்கள் ஒரு பொய்யன் (ட்ரோஜன்) என்று அவர் கூறியிருக்கிறார் நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?

பதில்: இந்தப் பேட்டியில் திரு. பிரேமதாசவுக்கும் எனக்கும் எதிராக அவர் கடுமையான தாக்குதல்களைச் செய்திருக்கிறார்.

நான் 50 ஆண்டுகளாக அரசியலில் இருந்துள்ளேன். இந்தப் பேட்டியில்தான் முதல் தடவையாக என்னுடைய வாழ்க்கையையும் பணியையும் பற்றி ஒருவர் இப்படிக் கூறியுள்ளார்.

நான் ஒரு "ட்ரோஜனைப்" போல பொய் சொல்பவன் என்று அவர் கூறுகின்றார். அவர் ஒரு "ட்ரோஜ"னைக் கண்டிருக்கிறாரா? கிறிஸ்துவுக்கு முன் 5,000 நூற்றாண்டில் "ட்ரோஜன்"கள் வாழ்ந்த ட்ரோய் நகருக்கு நான் சென்றுள்ளேன். அவர் போனாரா?

அங்கு இப்பொழுது ட்ரோஜன்கள் இல்லை. ஆகவே எப்படி அவர்கள் பொய் பேசுவார்கள் என்று என்னால் கூற முடியாது. ஆனால் நான் வரலாற்றை நேசிக்கிறேன்; அது மனித வரலாற்றில் ஓர் அற்புதமான காலம்; "ட்ரோஜன்" யுத்தத்தின் வரலாறு வாசிப்பதற்கு சுவையானது. ஜனாதிபதி குமாரதுங்க அதை வாசித்தாரா?

அந்த யுத்தத்தில் கிரேக்கர்கள் தான் பொய் சொன்னார்கள். ட்ரோஜன் இளவரசர் பாரிஸ் திருடிச்சென்ற தமது இளவரசியை மீட்க அவர்கள் தான் பொய் மரக்குதிரை ஒன்றில் உள்ளே துருப்புகளை நிறைத்து அன்பளிப்பாக அனுப்பினார்கள். "ட்ரோஜன்"கள் கிரேக்கர்களின் அன்பளிப்பு அது என நினைத்து மரக்குதிரையை நகரத்துக்குள் இழுத்துச் சென்றனர். தமது இளவரசியை மீட்பதற்குக் கிரேக்கர்கள்தான் பொய் புரிந்து அழுக்கு வேலை செய்தார்கள். பாசாங்கு செய்து, துருப்புகளை அன்பளிப்புக் குதிரைக்குள் நிறைத்து. நாடு திரும்புவதாக நடித்தது அவர்கள்தான்.

கிரேக்கப் படையினர் இரவில் குதிரைக்கு வெளியே வந்து அப்பாவி ட்ரோஜன்களைப் படுவதை செய்து தமது இளவரசியை மீட்டுச் சென்றார்கள்.

இந்த புத்தகத்திலிருந்து லத்தின் பழமொழி ஒன்று தோன்றியது: "நான் கிரேக்கர்களையும் அவர்கள் கொண்டுவரும் அன்பளிப்புக்களையும் கண்டு அஞ்சுகிறேன்"

அழுக்கு பிடித்த அரசியல்வாதியா?

கேள்வி: நீங்கள் மிகவும் அழுக்குப்பிடித்த அரசியல்வாதி என்றும் ஜனாதிபதி கூறியுள்ளார். என்ன கூறுகின்றீர்கள்?

பதில்: நான் மிகவும் அழுக்குப் பிடித்த அரசியல் வாதி என்றால்- நான் பல தேசியத் தேர்தல்களில் வெற்றி பெற்றது எவ்வாறு? என்னுடைய தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி நாடளாவிய தேர்தல் எதிலும் தோற்கவில்லை. அவர் கூறுவது போல்.

நான் மிகவும் அழுக்குப் பிடித்த அரசியல் வாதி என்றால் எமது நாட்டின் வாக்காளர்கள் அத்தகைய ஒருவருக்கு வாக்களித்துள்ளார்கள், அவருடைய கட்சியை ஆதரித்து மக்கள் பலதடவை (சந்திரிகாவின் கட்சியை விட்டு) வாக்களித்துள்ளார்கள்,

நான் இப்பொழுது ஓய்வு பெற்றுள்ளேன் ஆனால் 'இந்தியா ருடே' பேட்டியில் சந்திரிகா எழுப்பியுள்ள பிரச்சினைகளை ஒட்டி அவருடன் நாடளாவிய தேர்தல் ஒன்றில் போட்டியிட நான் இன்னமும் தயாராக இருக்கிறேன்.

என்னுடைய பிரசாரத்தில் இந்தப் பேட்டியை (இந்தியா ருடே பேட்டி) அச்சடித்து விநியோகித்து பிரேமதாசவுக்கும் எனக்கும் அதில் எதிராகப் பாவிக்கப்பட்ட வார்த்தைகள், சொற்றொடர்கள், மறைபொருள்கள். அவமதிப்பு ஆகியன பற்றித் தீர்ப்பு வழங்கும்படி மக்களைக் கேட்பேன்.

அவர் என்னை மிகவும் அழுக்குப்பிடித்த அரசியல்வாதி என்றும் பொய் சொல்பவர் என்றும் கூறியிருக்கிறார் நான் 20 ஆம் ஆண்டுகளில் ஒரு பல்கலைக்கழக மாணவனாக இருந்த காலத்திலிருந்து மகாத்மா காந்தியிலும் அவருடைய போதனைகளிலும் எனக்குப் பெரிய ஈடுபாடு என்பதைக் கூறிக்கொள்ளவிரும்புகிறேன். அக்காலத்தில் வாழ்ந்த பல இளைஞர்கள் இத்தகையவர்களே

"உண்மை தான் கடவுள்" என்று மகாத்மா போதித்தார் இது எப்பொழுதும் என்னுடைய சிந்தனை மீது பலமான செல்வாக்கு வகித்தது ஆகவே நான் என்னுடைய தனிவாழ்விலும் அரசியல் வாழ்விலும் தெரிந்து பொய் கூறியது கிடையாது. இத்தகைய நான் எப்படி மிகவும் அழுக்குப்பிடித்த அரசியல்வாதியாக முடியும்? பொய் பேசுபவனாக முடியும்?

நான் இவ்வாறு செய்த ஒரு உதாரணத்தை அவர் காட்டட்டும், அல்லது குற்றச்சாட்டுகளை வாபஸ் பெறட்டும்.

ரியூஷன் கொடுக்க தயார்

நீங்கள் இந்தியாவில் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியை ஏமாற்றி, விடுதலைப் புலிகளையும் இந்திய அமைதிப் படையையும் போரிட வைத்தீர்கள்; பின்னர் கை கழுவிவிட்டு திரு காந்தியைப் பார்த்துச் சிரித்ததாக அவர் (சந்திரிகா) கூறியிருக்கிறாரே...

பதில்: முதலாவதாக ராஜீவ் காந்தியைப் பற்றி சந்திரிகா [illegible] பான முறையில் குறிப்பிடுகின்றார். அவர் [illegible] எங்கே பெறுகின்றாரோ தெரியவில்லை! ராஜீவ் காந்தி என்னால் ஏமாற்றப்படவில்லை. அவருக்கு [சந்திரிகாவுக்கு] பின்னாலிருந்து "ரியூஷன்" கொடுக்க நான் தயார்

எண்பதாம் ஆண்டுகளின் ஆரம்ப காலத்தில் பிரபாகரனுக்கு அப்போதைய தமிழ் நாடு முதல் அமைச்சர் எம. ஜி இராமச்சந்திரன் ஆதரவளித்தார். எம் ஜி. ஆர். பிரபாகரனின் திறமைகளைப் புரிந்து கொண்டு அவருக்கு ஆயுதங்கள், பணம், ஆட்கள் ஆகியவற்றை வழங்கினார். எம். ஜி ஆர். தமது முதல் இலக்க எதிரியான தி மு க. தலைவர் மு. கருணாநிதியை எதிர்த்து தனக்கென ஒரு படையை விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் அமைக்க வேண்டும் என விரும்பினார் என்பது தெளிவு. ஒரு கட்டத்தில் எம். ஜி. ஆர். பகிரங்கமாகப் பிரபாகரனுக்குப் பெருந்தொகை பணத்தை வழங்கினார்.

பிரபாகரன் எம். ஜி. ஆரிடம் எதையும் கேட்டுப் பெற்றுக் கொள்ள முடியும்.

எம். ஜி ஆர். இறந்தபோது பிரபாகரனின் பிரதான ஆதரவு மறைந்தது. அப்பொழுது ராஜீவ் காந்தி பிரபாகரனை டில்லிக்கு அழைத்து வன்முறையைக் கைவிடும்படி கூறினார்.

தான் பிரபாகரனுடன் பேசி அவரை நம்பச் செய்ததாகக் காந்தி கூறினார்.

ராஜீவ் காந்தியின் வேண்டுகோளின்படி நாம் அவருடன் பேச்சு வார்த்தை நடத்தினோம்.

யாழ்ப்பாணத்தில் இந்திய அமைதிப்படை மாலை போட்டு வரவேற்கப் பட்டது. மூன்று மாத காலம் எல்லாம் சிறப்பாக இருந்தன சடுதியாகப் பிரபாகரன் மீண்டும் சண்டையிடத் தீர்மானித்தார்.

பிரதமர் காந்திக்கு நிகழ்ச்சிகளின் தொடர்பும் அவற்றின் முக்கியத்துவமும் விளைவுகளும் நன்கு தெரிந்திருந்தன என்பதை ஜனாதிபதி குமாரதுங்காவுக்கு நான் சொல்லி வைக்க விரும்புகிறேன். நானும் காந்தியும் நல்ல ஒற்றுமையாகவே வேலை செய்தோம் இதனால்த்தான் அவர் விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டிருப்பார் சந்திரிகாவின் கூற்றுகள் ராஜீவின் நினைவுக்கு [illegible] (ஐ-7)

‘தடா’வுக்கு பதிலாக புதிய சட்டம் வரும்

இந்திய மத்திய அரசாங்கம் அறிவிப்பு

புதுடில்லி, மே 18

இந்தியாவில் அடுத்த வாரம் காலாவதியாகும் தடா சட்டத்துக்குப் பதிலாக புதிய சட்டம் ஒன்று அறிமுகப் படுத்தப்படும் என இந்திய அரசு அறிவித்துள்ளது.

இந்தப் புதிய சட்டம் தவறாக பயன்படுத்தப்படாமல் இருப்பதை அரசு உறுதி செய்யும் எனவும்—

அதற்கேற்றவாறு போதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை கொண்டதாக புதிய சட்டம் வகுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளாக அமுலில் இருந்து வந்த தடா சட்டத்தை ரத்துச் செய்ய வேண்டும் என்று மாநிலங்கள், பல்வேறு அரசியல் கட்சிகள், மற்றும் பல்வேறு தரப்புகள் மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து வந்தன.

அதனைத் தொடர்ந்து இந்தச் சட்டத்தை மேலும் நீடிக்காமல் காலாவதியாக விட இந்திய அரசு முடிவு செய்திருந்தது. (ஐ-14)

உயிரிழந்த புலிகளின் எண்ணிக்கை; அதிகமாக்கிக் காட்ட அரசு முயற்சி

லண்டன், மே. 18

கடந்த நான்கு வாரங்களில் கொல்லப்பட்ட போராளிகளின் எண்ணிக்கையை அதிகமாக்கிக்காட்ட அரசு முனைந்துள்ளது.

பி. பி. ஸி. தனது இலங்கை தொடர்பான கண்ணோட்டத்தில் மேற்கண்டவாறு தெரிவித்தது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

நாடு முழுவதும்— நகரங்களிலும், சிறு நகரங்களிலும்— பாதுகாப்பு படைகள் புகுந்து சோதனை நடத்தி வருகின்றன.

கிழக்கில் பலசமயங்களில் பாதுகாப்புப் படைகள் சூறையாடியிருக்கின்றன.

மட்டக்களப்புக்கு 15மைல் வடக்கே காலைக்கடனை முடித்துக் கொண்டிருந்த இரு இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதாக செய்தி வந்திருக்கிறது.

கடந்த நான்கு வாரங்களில் கொல்லப்பட்ட. போராளிகளின் எண்ணிக்கையை அதிகரித்துக்காட்ட இது போன்ற நிகழ்ச்சிகள் பாதுகாப்பு அமைச்சுக்கு உதவியிருக்கக் கூடும்.

சிறப்பு பத்திரிகைக் குறிப்பு ஒன்று 181புலிகள் கொல்லப்பட்டனர் என்றும், 250 புலிகள் காயமடைந்தனர் என்றும் கூறுகிறது.

ஆனால் சிங்கள மக்கள் மற்றும் இராணுவத்தினரின் மன உற்சாகத்தை அதிகமாக்க பாதுகாப்பு அமைச்சகம் தனது வெற்றிகளை இப்படி மிகைப்படுத்திக் காட்டுகிறது என்று பாதுகாப்பு ஆய்வாளர்களும், மேலைநாட்டு ராஜதந்திரிகளும்கருதுகிறார்கள்— என்று பி. பி. ஸி. குறிப்பிட்டது. (உ-3)

நிறை குறைந்த 22 குழந்தைகள்

தென்மராட்சி, மே. 18

சாவகச்சேரி சுகாதாரவைத்திய அதிகாரி பிரிவில் கடந்த மாதத்தில் [ஏப்ரல்] பிறந்த 202 குழந்தைகளில் 22 குழந்தைகள் நிறை குறைந்த நிலையில் பிறந்ததாகபுள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன இவற்றில் எட்டுச்சிசுக்கள் மரணமடைந்தன. (க-117)

ஆண்டு ஒன்று மாணவர் விண்ணப்பம் கோரல்

கொழும்பு, மே. 18

1996 ஆம் ஆண்டில் பாடசாலைகளில் ஆண்டு ஒன்றுக்கு மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஜூன் மாதம் 30 ஆம் திகதி வரை இதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் எனவும்—

அடுத்த ஆண்டில் 3 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமான புதிய மாணவர்கள் ஆண்டு ஒன்றில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார். [ஐ-14]

மதத்தலைவர் கைதானபின் ஜப்பானில் குண்டு வெடிப்பு

டோக்கியோ ஆளுநர் அருந்தப்பு

டோக்கியோ, மே 18

டோக்கியோ ஆளுநரின் அலுவலகத்தில் நேற்று முன் தினம் குண்டு ஒன்று வெடித்துள்ளது.

கடந்த மார்ச் மாதத்தில் டோக்கியோ சுரங்க ரயில் விஷவாயுத்தாக்குதல் சம்பவத்திற்கு பொறுப்பானவர்கள் என்று கருதப்படும் அவும் ஷின்ரி கியோ மத அமைப்பின் தலைவரான ஷோகோ அஸகறா கைது செய்யப்பட்ட கையோடு இக்குண்டு வெடிப்புச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

ஆளுநர் அலுவலகத்தில் இருந்த "பார்ஸல்" ஒன்றை அது வீடியோ ஒலிப்பதிவு நாடா "பார்ஸல்" எனக் கருதி பிரித்த போதே அது வெடித்தது

இதனால் ஆளுநரின் உதவியாளரின் கரம் ஒன்று துண்டிக்கப்பட்டதோடு, மேலும் சிலர் காயங்களுக்கு உள்ளாகினர்.

ஷோகோ அஸகறா கைது செய்யப்பட்டதை அடுத்த தமது அபாயகரமான காலம் முடிந்து விட்டது என்று ஜப்பானியர் நம்பினர். அவர் கைது செய்யப்பட்டது தொடர்பான கொண்டாட்டங்களை அவர்கள் நடத்தினர்

எனினும், ஆளுநரின் அலுவலக குண்டு வெடிப்பு இந்த நம்பிக்கையை அற்றுப் போகச் செய்துள்ளது.

"அவும் ஷின் ரி கியோ" மதப் பிரிவைச் சேர்ந்த நச்சு வாயுத் தாக்குதல்களோடு தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படும் பலர் இன்னமும் கைது செய்யப்படாமல் இருப்பதாலும் —

அவர்களின் தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட இரசாயனப் பொருள்கள் அனைத்தும் கைப்பற்றப்படாததாலும் இத்தகைய தாக்குதல் நடவடிக்கைகள் பற்றி மக்கள் மேலும் விழிப்பாக இருக்க வேண்டும் என்று ஜப்பானியப் பிரதமரும் பொலீஸாரும் மக்களை எச்சரித்துள்ளனர். (ஐ-5-14)

நகரில் அழுகிய பழவகை பறிமுதல் செய்து அழிப்பு!

யாழ்ப்பாணம். மே 18

யாழ். நகரில் சில வியாபாரிகளிடம் அழுகிய நிலையில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பழவகைகளை சுகாதாரப் பகுதியினர் பறிமுதல் செய்து அவற்றை அழித்துள்ளனர்.

நகரில் உள்ள சில பழக்கடைகளில் யாழ். பிராந்திய உணவு மருந்து பரிசோதகர் திரு மகாதேவன் கடந்த வாரம் புதனன்று திடீர் பரிசோதனை நடத்தினார். அப்போதே அழுகிய நிலையில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பழவகைகள் பறிமுதல் செய்யப்பட்டன.

நூற்றுக் கணக்கான அப்பிள்கள் மற்றும் தோடம் பழங்கள் என்பனவே இவ்வாறு பறிமுதல் செய்யப்பட்டன. [ஐ-4-15]

20 அரச எம். பிக்கள் யாழ். வர முயற்சி

கொழும்பு, மே 18

தென்பகுதியைச் சேர்ந்த 20 அரச தரப்பு இளம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாழ். வருவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இதற்கான அனுமதியை அவர்கள் ஜனாதிபதியிடம் கோரியுள்ளனர்.

வடபகுதி சென்று அரசியல் தீர்வு ஒன்றைக் காண தயாராய் இருக்கின்றோம் இதற்கான அனுமதியை ஜனாதிபதியிடம் இருந்து எதிர்பார்த்துள்ளோம் என பொதுஜன ஐக்கிய முன்னணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வில்சன் குருப்பு ஆராய்ச்சி தெரிவித்துள்ளார். [ஐ 14]

கலாபூஷணம்விருதுபெறும் 13 தமிழ்க் கலைஞர்கள்

கொழும்பு, மே. 18

தமிழ் கலைஞர்கள் 13 பேருக்கு கலாபூஷண விருது வழங்கப்பட உள்ளது.

விருது வழங்கும் வைபவம் எதிர்வரும் 22 ஆம் திகதி தேசிய வீரர் தினத்தன்று கொழும்பு ஜோன் டி ஸில்வா ஞாபகார்த்த கலையரங்கில் நடைபெற உள்ளது.

தமிழ், முஸ்லிம் கலைஞர்களுக்கான விருதுகளை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும், இஸ்லாமிய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களமும் வழங்கும்.

விருது பெறும் ஒவ்வொருவருக்கும் 10 ஆயிரம் ரூபா பணமும் சான்றிதழும் கிடைக்கும்

கலாபூஷணம் விருது பெறும் தமிழர்கள் 13 பேரின் பெயர்கள் வருமாறு:

சீ பத்மலிங்கம் (வாய்ப்பாட்டு), ஆர். சந்தானகிருஷ்ணன், அ. கணேசசர்மா [மிருதங்கம்] என். ராஜு (வாய்ப்பாட்டு), சு. கணேசபிள்ளை (தவில்), திருமதி திரிபுரசுந்தரி யோகானந்தன் (பரதநாட்டியம்), பாலகப்போடி நாகமடிப்போடி (மரபுக் கலைகள்)

மு கணபதிப்பிள்ளை [மரபுக் கலைகள்), கே. கணேஸ் [இலக்கியம்] தெளிவத்தை ஜோசப் [இலக்கியம்] கே எம். பஞ்சாபகேசன் [நாதஸ்வரம்], பொன் சுந்தரலிங்கம் [பாட்டு]. எஸ் வேலானந்தன் [நடனம்]]ஐ]

நாளை

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமானாறு ஸ்ரீசெல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகள் நாளை வெள்ளிக்கிழமை மாலை 3மணியளவில் தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்ச்சி இடம் பெறும். மேற்படி வித்தியாலய பிரதி அதிபர் திரு வே துலாசிங்கம் அறிமுகவுரையை நிகழ்த்துவார். (க-173)

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

இராச வீதியில் கிணற்றுடன் பதினான்கு பரப்பு தோட்டக் காணி விற்பனைக்குண்டு. விவரங்களுக்கு சி. அருணாநிதி, விநாயகர் ஸ்ரோர்ஸ், பழம் சந்தியடி, திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி. (36681)

முதலாம் ஈத்து 20 நாள் ஒரு கடாக்குட்டியுடன் பால் ஆடு விற்பனைக்குண்டு. குட்டியும் தாயும் 100 வீதம் தூய்புரவான சானன் இனம். தொடர்பு: 55, ஒலியர் லேன், கலட்டி வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (8543)

இரண்டரை மாதங்கள் நிரம்பிய, தடுப்பூசி போடப்பட்ட Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகளும், நன்கு உக்கிய கோழி எருவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: சி. குலசிங்கம், இல. 9, நக்கா வீதி (Bar முன்பாக), யாழ்ப்பாணம். (36684)

நல்ல நிலையிலுள்ள Fmergency Light Battery Charger [6V - 12V] Hero Bycycle. Acupuncture Needles & Electro Stimulator விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: விக்ரர் அன்ரனி, இல 117/2 மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம். (36683)

காணி விற்பனைக்கு

சுன்னாகம் புன்னாலைக்கட்டுவன் வீதியில் புகையிரத நிலையத்தை அண்மித்ததும் பெருந்தெரு மேம்பாட்டுக் கழகத்திற்கு ஏற்ற எல்லையில் உள்ள 4½ பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி ப. சிதம்பரநாதன் உடையான் வளவு, பயிலணி சுன்னாகம். (8350)

வௌ்ளாறு ஆண்டு 10 11

G. C. E. O/L பரீட்சைக்குத் தயார் செய்வதற்கு வரலாறு குறிப்புகள் ஆண்டு 10, 11 உதவியாக அமையும். வினா – விடைகள் விளக்கங்களுடன் அமைந்துள்ளன. ஆசிரியர்: N Mylvaganam. B. A. (Cey) Modern History (Special), Dip-in-Ed. (Cey) புத்தகசாலைகளில் பெறலாம். (36618)

சோதிடம்

கட்டைக்காடு சேர்ந்த சாஸ்திர கல்லூரியில் பயிற்சிபெற்று வரும் சோதிட மேதை ஜி பார்த்தசாரதி அவர்களின் மாணவியுமான செல்வி ஜெ. தில்லையம்பலம் அவர்களிடம் சோதிட குறிப்புகள், திருமணப் பொருத்தங்கள், நற்பலன் அறிந்து வாழ்வை முன்னேற்ற தொடர்பு கொள்ளவும்: இல 135, பருத்தித்துறை வீதி [சிவன் கோவிலுக்கு முன்பாக], நல்லூர். [36558]

மாணவர் எழுச்சி நாள் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே. 18

தமிழீழ மாணவர் எழுச்சி நாள் தொடர்பான கலந்துரையாடல் தொடரில் இன்று தெல்லிப்பழை, உடுவில் வலிகாமம்கோட்ட மாணவர் எழுச்சி நாள் செயற்குழு உறுப்பினர்கள், மாணவர் அமைப்பு பொறுப்பாசிரியர்கள் மாணவப் பொறுப்பாளர்களுடனான கலந்துரையாடல், காலை 9மணிக்கு இராமநாதன் கல்லூரியிலும் —

சங்கானை, சண்டிலிப்பாய் கல்விக்கோட்டங்களுக்கான கலந்துரையாடல் முற்பகல் 11 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும்—

பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய உறுப்பினர்களுடனான கலந்துரையாடல் பிற்பகல் 4மணிக்கு விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு, நடுவப் பணியகத்திலும்— நடைபெறும் [ஜ 5]

மெய்வல்லுநர் போட்டி

வட்டுக்கோட்டை மே 18

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் மத்திய பிரிவு வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி 20 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு கல்லூரி விளையாட்டு மைதானத்தில் பவளவிழாக் கல்லூரி அதிபர் திரு ஜி இராஜநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது [க–161]

எடிசன் அக்கடமி

(யாழ். இந்துக்கல்லூரி அருகில்)
411/1 கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

O/L கணிதம்

புதிய பிரத்தியேக கணித வகுப்பு

SPECIAL BATCH

ஆசிரியர்:
திரு. B. P. பாஸ்கரன்

ஆரம்பம் 18-05-95
வியா பி. ப 6மணி, 7-30மணி
திங்கள் – வியாழன் பி. ப 6 - 7.30 மணி

பாடத்திட்டம் முற்றாகப் பூர்த்தியாக்கப்படும்
(சி/1222)

9-ம் ஆண்டு நினைவஞ்சலி

பாக்கியநாதன் வில்லியம் ரஞ்சித்
லெப். அங்கிள் (மாமா)

தோற்றம்: 21–06–1950
வீரச்சாவு: 18–05–1986

ஆண்டுகள் பல சென்றாலும் உன் நினைவுகள் எம் நெஞ்சைவிட்டு அகலாது. அன்றைய தினம் இவருடன் வீரச்சாவு அடைந்த ஏனைய ஐந்து போராளிகளுக்கும் எமது அஞ்சலிகள்.

பெற்றோர், சகோதரர்கள்,
உறவினர், நண்பர்கள்.

செற்பலி மேற்கு,
மிருசுவில்.

(36641)

31-ம் நாள் நினைவஞ்சலி

திருமதி பாலசிங்கம் சிவபாக்கியம்
[வேலணை – வங்களாவடி]

தோற்றம்: 04-11–19 6
மறைவு: 18–04–1995

இன்று (18-05-95) வியாழக்கிழமை பகல் 11மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் பங்கு பற்றி சிறப்பிக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பா. லிங்கநாதன் குடும்பத்தினர்,
பா. சுந்தரம் குடும்பத்தினர்.

50/45, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(36669)

4-ம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
செல்லம்மா கனகரத்தினம்
திதி: 18 – 05 – 1995

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

13/3 நாயன்மார் வீதி,
நல்லூர்

[36659]

றோயல் இன்டஸ்றிஸ்
ஸ்தாபனத்தாரின்
உற்பத்திப் பொருள்கள் அனைத்தையும்
தட்டுப்பாடின்றி வழங்குவதற்காக -

சிவா நறுமணப் பூங்கா

உங்களை அழைக்கின்றது…………

- ★ இந்திய தயாரிப்பு ஊதுபத்திகள்
- ★ ஊதுபத்தி வெற்றுப் பெட்டிகள்
- ★ அதற்குரிய குச்சிகள், சென்ற் வகைகள்
- ★ றோயல் தயாரிப்புக்கள்
- ★ மென்பான தயாரிப்புப் பொருள்கள்
- ★ ஐஸ்கிறீம் தயாரிப்புப் பொருள்கள்
- ★ பேக்கரிக்குரிய அனைத்துப் பொருள்கள்
- ★ பிஸ்கற், இனிப்பு, ரொபி, பால்மாவு நெய்வகைகளுக்கு அத்தனைக்கும்

சிவா நறுமணப் பூங்கா

288, கேணல் கிட்டுசாலை,
[ஆஸ்பத்திரி வீதி]
யாழ்ப்பாணம். (சி-1226)

என்றும் நீங்காத நினைவலைகள்

18–04–1995 இல்
இறைவனோடு இணைந்த
அமரர் புஷ்பராஜா மகேந்திரன் சிதம்பரப்பிள்ளை
(Civil Engineer, Engineering Geologist & UNDP National Consultant)

அவர்களின் ஆன்மா சாந்தியடைய என்றும் பிரார்த்திக்கும்:
— அன்புக்குரியவர்கள்.

(36682)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மணே நம

8-ம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
அப்புலிங்கம் திருக்கேதீஸ்வரன்
(ராசன்)

தோற்றம்: 21 – 11 – 1960
மறைவு: 18 – 05 – 1987

கற்றறிந்தார் கவை அன்பில்
கலந்தவர்கள் கலங்க
கருணையிலாக் காலனுனைக்
கவர்ந்திடவுந் தகுமோ
இற்றைவரை சாக்பெலாங் கொண்டு
இயங்கி வந்த உருவம்
எங்கொழித்து மறைந்ததுதான்
இயற்கையெலாம் இதுவோ

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

ஐயா, அம்மா,
சகோதர சகோதரிகள்,
உற்றார், உறவினர் நண்பர்கள்

மு. அப்புலிங்கம்
977/1, கே. கே. எஸ். வீதி,
[illegible]
வண்ணார்பண்ணை.

[36686]

தற்கொலை புரிவோர் இலங்கையிலேயே அதிகம்

கொழும்பு, மே. 18

உலகில் தற்கொலை செய்து கொள்பவர்களில் இலங்கையர்களே அதிகமானோர் என்று புள்ளிவிபரக்கணிப்பீடுகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

சிறு சிறு மனக்குழப்ப சம்பவங்களே இவ்வாறு இவர்களை தற்கொலைக்கு தூண்டுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலைநாடுகளில் மனக்குழப்பங்களுக்கு உள்ளாவோர் போதைப்பொருள் பாவனையை நாடுவதன் மூலம் தம்மை அதிலிருந்து விடுவித்துக் கொள்கிறார்கள். அதனால் அங்கு தற்கொலையில் ஈடுபடுவோர் தொகை குறைவாக உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-14)

ஆச்சிரமம், ஆலயங்களில் சமய விழாக்கள் தேவை

நூல் வெளியீட்டு விழாவில் உரை

"இன்றைய காலத்தில் ஆச்சிரமங்கள், ஆலயங்கள் தோறும் சமயத்தை முன்னெடுத்துச் செல்லும் விழாக்கள் தேவையாகின்றன."

கைதடி வடக்கு ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமத்தில் ஏப்ரல் 30 ஆம் திகதி நடைபெற்ற திருமுறைப் பெருவிழாவில் "தமிழ் வேதத் திரட்டு" என்னும் நூல் வெளியீட்டு நிகழ்வில் வெளியீட்டுரை நிகழ்த்திய யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் திரு ப. கோபாலகிருஷ்ணன் இவ்வாறு கூறினார்

இந்நிகழ்வு யாழ் இந்து சமயப் பேரவைத் தலைவர் திரு நா. முத்தையா தலைமையில் நடைபெற்றது.

திரு கோபாலகிருஷ்ணன் மேலும் பேசுகையில், வேதங்கள், ஆகமங்கள், திருமுறைகளில் அருமையான மக்களுக்கு வழிகாட்டும் சிந்தனைகளை வழங்கியுள்ளார்கள் என்று கூறினார்.

யோக சுவாமிகள் ஆசிரமத்தைச் சேர்ந்த திரு. க. திருநாவுக்கரசு தொடக்கவுரையையும் யாழ். நமசிவாய வித்தியாலய அதிபர் திரு. கு. சண்முகநாதன் அறிமுகவுரையையும் நிகழ்த்தினார்கள்

இவ் விழாவில் சமயப் பணி செய்த பெரியோர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கும் நிகழ்வும் இடம் பெற்றதுடன் ஆசிரம பல்பொருள் விற்பனை நிலையமொன்றும் தொழிலதிபர் இ கோபாலகிருஷ்ணனால் திறந்து வைக்கப்பட்டது [க-31]

உ

யா/ இராமநாதன் கல்லூரி
சுன்னாகம்

இல்ல மெய்வல்லுநர் போட்டி - 1995

காலம்: **19 – 05 – 1995 பிற்பகல் 1.30**
இடம்: **கல்லூரி விளையாட்டு மைதானம்**

★ தலைவர்
திருமதி ஆ சிவஞானசுந்தரம் அவர்கள்
(அதிபர்)

★ பிரதம விருந்தினர்
வைத்திய கலாநிதி
திரு. இ. தெய்வேந்திரன் அவர்கள்
(சுகாதார வைத்திய அதிகாரி,
மாநகராட்சி மன்றம், யாழ்ப்பாணம்)

★ சிறப்பு விருந்தினர்
திரு சு. இரத்தினராசா அவர்கள்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர், உடுவில்)

★ கௌரவ விருந்தினர்
திரு. பா. கபிலன் அவர்கள்
(பொறுப்பாளர், மாணவர் அமைப்பு,
உடுவில, தெல்லிப்பழை)

★ பரிசில் வழங்கல்
வைத்திய கலாநிதி
திருமதி செங்கமலம் தெய்வேந்திரன் அவர்கள்
(போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.
பழைய மாணவி, இராமநாதன் கல்லூரி.)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
★ அன்புடன் அழைக்கின்றோம் ★

[சி-5798]

புதிய பெரடெனியா இன்ஸ்ரிரியூட்

K. K. S. Road, கொக்குவில்.

நீங்கள் எதைத் தேடுகிறீர்கள்?
புதிய பெரடெனியாவையா?
ஏன்?

மீண்டும்
திரு. இரா. அருட்செல்வம்
ஆசிரியர்

அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க
O/L கணிதம் கற்பிக்கப் போகிறார்களாம்.
அதுதான் நேர அட்டவணை வேண்டப்
போகிறேன்
ஏன் இன்று உதயன் பத்திரிகையில்
விளம்பரம் வந்திருக்குதே பார்க்கவில்லையா?
என்ன என்று

★ O/L கற்கும் மாணவர்களுக்கும் கணித பாடம் சித்தியடையத் தவறிய மாணவர்களுக்கும் விசேட கணித வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

திங்கள் மாலை 6 – 7
வெள்ளி மாலை 6 – 7

[சி-1395]

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

மலையகத்தில் ஆயுதபாணிகள்

மலையகப் பகுதியில் பெரும் எண்ணிக்கையான விடுதலைப் புலிகள் ஊடுருவியுள்ளனர்.

தோட்டப் பகுதியிலிருந்து முன்னர் காணாமற் போன தமிழ் இளைஞர்கள் இப்போது ஆயுதம் தாங்கியவாறு மீண்டும் வந்துள்ளனர்.

ஆயுத இளைஞர்களுக்கு புகலிடம் மற்றும் அடிப்படைத் தேவைகளையும் வழங்குவதற்கு ஏராளமான விடுதலைப் புலிகள் ஆதாரவாளர்கள் மலையகத்தில் உள்ளனர்.

கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று இத்தகவல்களை வெளியிட்டிருக்கிறது அனேகமாக பொலீஸ் மற்றும் பாதுகாப்பு வட்டாரங்களே இத்தகவலைப் பத்திரிகைக்கு வழங்கியிருக்கும் என்று நம்பலாம்.

தெற்கில், குறிப்பாக கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும், தமிழர்களைக் கைது செய்து துன்புறுத்துவதோடு, பணம் தேடுவது போல—

மலையகத்திலும் தமிழர்களைத் துன்புறுத்துவதற்கும், பணம் சேர்ப்பதற்கும்—இத்தகைய தகவல்களை அவர்கள் பத்திரிகைக்கு ஊட்டியிருப்பர். உண்மையாகவே மலையக இளைஞர்கள் ஆயுதபாணிகளாக மாறியிருந்தால் அதற்கு அரசாங்கமே பொறுப்பு ஏற்க வேண்டும்.

வடக்கு- கிழக்கு வாழ் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்துவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டவர்கள். கல்வி, உயர் கல்வி, வேலைவாய்ப்பு உட்பட சராசரி வாழ்க்கைத் தேவைகளில் பாரபட்சம் புறக்கணிப்பு என்பன இருந்தன. மாறிமாறி வந்த சிங்கள அரசாங்கங்கள் தமிழர்களின் வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகளை மறுத்து வந்தன.

இந்த உரிமை மறுப்புக்கு எதிரான அறவழிப் போராட்டங்களை இராணுவ ஆதிக்கத்தினால் அரசுகள் அடக்க முயன்றபோது ஆயுதப் போரரட்டம் வெடித்தது.

எழுபதுகளில் வடக்கு-கிழக்கில் உருவாகிய பின்னணி, இப்போது மலையகத்திலும் தோன்றுகிறது; தோற்றுவிக்கப்படுகிறது.

கல்வி, வேலை வாய்ப்பு வீட்டு வசதி மற்றும் ஏனைய வசதிகளில் மலையகத் தமிழ் இளைஞர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். மிகக் குறிப்பாக தோட்டப்பகுதிகளில் அவர்கள் தமது பெற்றோர் வாழ்ந்த பகுதிகளில் தமக்கென காணியோ, குடியிருப்பு வசதியோ பெறமுடியாதவர்களாக இருக்கிறார்கள். வந்தேறு குடிகளாகக் கருதி அவர்களை விரட்டுவதற்கு மறைமுக நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

கொழும்பு அரசாங்கங்களில் பெயருக்கு மலையக அமைச்சர்கள் அங்கம் வகித்தாலும், மலையக மக்களின் வாழ்க்கை நிலையில் உரிய - போதியளவு— மாற்றங்கள் இன்னும் ஏற்படவில்லை.

வடக்கு - கிழக்குத் தமிழர்களை இரண்டாந்தரப் பிரஜைகளாகவே வைத்திருப்பதற்கு சிங்கள அரசாங்கங்கள் எவ்வாறு விரும்புகின்றனவோ, அது போலவே மலையகத் தமிழர்களையும் நடத்த விரும்புகின்றன.

எனவே மலையகம் மற்றொரு வடக்கு - கிழக்காக மாறும் என்று எப்போதிருந்தோ எதிர்பார்க்கப்பட்டதே. அந்த நிலைமை இப்போது முகிழ்கிறது என்றால் அதில் அதிசயம் எதுவும் இருக்க முடியாது.

இலங்கை சிங்களவர்களுக்கு மட்டுமே சொந்தமானது என்ற வீணான கற்பனையிலும் — திரிபுவாதத்திலும் — சிங்களவர்கள் நினைத்திருக்கும் வரை —

சிங்களவர்களைத் தவிர்ந்த ஏனையோர் சம உரிமைகள் அற்றவர்களாக — இரண்டாந்தரப் பிரஜைகளாக — அரை அடிமைகளாக — வாழ வேண்டும் என்று நினைக்கும் வரை —

வடக்கு - கிழக்கில் மட்டுமன்றி மலையகத்திலும் ஆயுதப் புரட்சி வெடிக்கவே செய்யும்.

தவறிழைத்தவன் திருந்த வேண்டும். அவ்வாறன்றி மீண்டும் மீண்டும் அதே தவறைச் செய்தால், அதற்கான தண்டனையையும், துன்பத்தையும் அனுபவித்தே ஆகவேண்டும்.

உணவு விநியோக நெருக்கடியை அடுத்து

படையினருக்கு தகரத்தில் அடைத்த உணவுப் பொதிகள் வழங்க ஏற்பாடு

கொழும்பு, மே 18

வடக்கில் உள்ள படைமுகாம்களுக்கு உணவுப் பொருள்களை அனுப்புவது பாதிக்கப்பட்டுள்ளதையடுத்து—

யுத்தகளத்தில் உள்ள படையினருக்கு தகரத்தில் அடைக்கப்பட்ட உணவுப் பொதிகளை பெற படைத்தலைமையகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தப் பொதிகளைப் பெறுவதற்காக இராணுவம் கேள்விப்பத்திரம் கோரியுள்ளது.

ஒவ்வொரு பொதியும் சோறு, ஆட்டிறைச்சி, நெத்தலிக்கருவாடு, காய்கறிகள், மாட்டிறைச்சி ஆகியவற்றை உள்ளடக்கியதாகவும்—

அந்த பொதி தனிப்பட்ட ஒருவருக்கு போதுமானதாகவும்—

உடனடியாகச் சாப்பிடக்கூடியதாகவும்— இருக்க வேண்டும் என்று கேள்வியில் கோரப்பட்டுள்ளது.

அலுமினியத்தில் தயாரிக்கப்பட்ட பைகளிலேயே இவ்வுணவுப் பொதி அடைக்கப்படவேண்டும்.

இரண்டு வருடங்களுக்கு பழுதடையாமல் இருக்க வேண்டும். என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ-3]

வவுனியா தடை முகாமில்

தொண்டர் நிறுவன அதிகாரிகள் மூவர் கைது!

கொழும்பு மே. 18

தடை செய்யப்பட்ட பொருள்களை வடபகுதிக்கு கடத்திச் செல்ல முயன்ற, தொண்டர் ஸ்தாபனம் ஒன்றின் அதிகாரிகள் மூவரை வவுனியா, ஈரப்பெரியகுளம் பொலீஸார் கைது செய்துள்ளதாக வானொலிச் செய்தி ஒன்று தெரிவித்தது.

இந்த மூவரும் தமிழர்கள் என்றும், இவர்கள் தாம் பயணம் செய்த அம்புலன்ஸ் வாகன கதவுக்குள் மறைத்து வைத்தே பொருள்களை கடத்த முயன்றதாகவும் கூறப்பட்டது.

தற்போது இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், இவர்கள் பயணம் செய்த அம்புலன்சும் பொலீஸார் வசம் உள்ளது

வவுனியா சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி மேல் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார். (ஐ-5)

விடுமுறை நாள்களிலும் தபால் விநியோகிக்க முயற்சி

பிரதி அஞ்சல் அதிபர் நாயகம்

யாழ்ப்பாணம் மே 18

வட பகுதி தபால் பொதிகள் அரசாங்க லீவு நாள்களில் பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்தாலும் அத் தபால் பொதிகளை எடுத்து தரம் பிரித்து சேவை அடிப்படையில் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பதில் வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் திரு. ச. சடாச்சரநாதன் தெரிவித்தார்.

சென்ற ஞாயிறு, திங்கள் விடுமுறை நாட்களில் தபால்கள் விநியோகிக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அவை ஏன் அவ்வாறு விநியோகிக்கப்படவில்லை என்று அவரிடம் கேட்டதற்கே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மக்களின் அத்தியாவசிய சேவை என்ற அடிப்படையில் எதிர்காலத்தில் லீவு நாள்களிலும் தபால் பொதிகள் வந்தால் தபால்களை விநியோகிக்குமாறு தபால் ஊழியர்களிடம் தாம் கோரியிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

“கிச்சின் கபினற்” அரசு நடத்துகிறது

கேலி செய்கிறார் ரணில்

கொழும்பு, மே. 18

''இன்றைய அரசு அமைச்சரவையை புறக்கணித்துவிட்டு ''கிச்சின் கபினற்றே'' (குசினி அமைச்சரவை) நடத்துகிறது''

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

1983ஆம் ஆண்டுக்கு பின்னர் யுத்த நிலையிலும், வான்பரப்பிலும் எமது விமானப்படையே மேலாதிக்கம் செலுத்தியது. இப்போது நிலைமை மாறியுள்ளது. இதற்கு காரணம் அரசாங்கம்தான்.

வன்னியில் பூநகரி, ஆனையிறவு, வெற்றிலைக்கேணி என்று மூன்று படைப்பிரிவுகளை சிறந்த முறையில் நிர்மாணித்தோம். இப்போது யாவும் மாறிவிட்ட நிலை உள்ளது.

படையினருக்கு போதிய பொறுப்பினைக் கையளிக்க வேண்டும்.

—இவ்வாறு ரணில் விக்கிரமசிங்கா மேலும் கூறினார். [ஐ-3]

சமுர்த்தி திட்டம் அமுலுக்கு வருவதால்

உணவு முத்திரை திட்டம் அடுத்த மாதம் நிறுத்தம்!

கொழும்பு, மே. 18

பொ. ஐ. முன்னணி அரசினால் அறிமுகப்படுத்தப்படும் “சமுர்த்தி” திட்டம் ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வருகிறது.

“சமுர்த்தி” திட்டம் அமுலுக்கு வருவதை அடுத்து ஏற்கனவே நடைமுறையில் இருந்த ‘ஜனசவிய’, வறுமை நிவாரண உணவு முத்திரைத் திட்டம் என்பன அன்று முதல் நிறுத்தப்பட உள்ளன.

நாட்டில் 18 மாவட்டங்களைச் சேர்ந்த 15 லட்சத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் 'சமுர்த்தி' திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படவுள்ளன என்று அரசு அறிவித்துள்ளது.

இத்திட்டத்தின் படி—

மாதாந்தம் வருமானமாக 500 ரூபாவுக்கு குறைவாகப் பெறும் குடும்பங்களுக்கு ஆயிரம் ரூபாவும்—

501 ரூபா முதல் ஆயிரம் ரூபா வரை மாதவருமானம் பெறும் குடும்பங்களுக்கு 500 ரூபாவும் மாதாந்த உதவிப் பணமாக வழங்கப்படும்.

தெற்கில் இத்திட்டம் உடனடியாக நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டாலும் தமிழ் பகுதிகளில் இத்திட்டம் அமுலுக்கு வர சில காலம் எடுக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் உணவு முத்திரை பெற்று வந்த ஆயிரக்கணக்கான குடும்பங்கள் உணவு முத்திரைத் திட்டம் நிறுத்தப்படுவதால் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளன. [ஐ]

கிழக்கு புனரமைப்பு பணி அனுருத்தவின் பொறுப்பில்

கொழும்பு மே 18

கிழக்கு மாகாண புனரமைப்பு மற்றும் புனர் நிர்மாணப்பணிகளை மேற்கொள்ளும் பொறுப்பு பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுரூரத்தரத்வத்தையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணிகளை மேற்கொள்ள அனுருத்தரத்வத்தை செயலணிக்குழு ஒன்றை நியமித்துள்ளார்.

இந்தக் குழுவில் மூன்று இராணுவ அதிகாரிகளும் அச்சம் பெறுகின்றனர்.

மூன்றுக்கு மேற்பட்ட தடவைகள் இந்தக் குழு கூடிய போதும் யுத்தம் காரணமாக அதன் வேலைகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை— கிழக்கு மாகாண புனர்வாழ்வுப் பணிகள் அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (ஐ-3)

பரீட்சைகள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மே 18

பரீட்சைத் திணைக்களத்தால் இம்மாதம் நடத்தப்படவிருந்த பல பரீட்சைகள் அடுத்த மாதத்துக்குப் பிற்போட்டுள்ளதாக தெரியவந்தது.

தட்டெழுத்தாளர்கள் எழுதுவினைஞர்கள் பரீட்சைகளும், பதவி உயர்வுப் பரீட்சைகளும் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்சமயம் ஏற்பட்டுள்ள யுத்த நிலையால் தெற்கில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளை அடுத்து இப்பரீட்சைகள் பிற்போடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வினாத்தாள் தயாரித்தல், அச்சிடுதல் போன்ற விடயங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

தமிழ் மொழி திறன் போட்டி

பருத்தித்துறைக் கல்விக் கோட்டத்தின் தமிழ்மொழித் திறன் போட்டிகளில் ஆரம்ப பிரிவுக்கான போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. வே. தி. செல்வரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ-173)

வடக்கில் பிரதான படை முகாம்கள் படையினரின் முழுக் கட்டுப்பாட்டில்

ரணிலிடம் அனுருத்த தெரிவிப்பு

கொழும்பு, மே 18

வடமாகாணத்தில் பூநகரி, பலாலி, ஆனையிறவு ஆகிய இடங்களில் அமைந்துள்ள பிரதான இராணுவ முகாம்களின் பாதுகாப்பு முற்றிலுமாக அரச படைகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. இம்முகாம்களின் பாதுகாப்பு தொடர்பாக அரசிற்கு எந்தப் பிரச்சினைகளும் எழவில்லை.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை எதிர்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்காவிடம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் ரணில் விக்கிரமசிங்கா அலரிமாளிகைக்குச் சென்ற போதே இவ்வாறு அவரிடம் தெரிவிக்கப்பட்டது.

சில செய்தி நிறுவனங்கள் எவ்வாறான பிரசாரங்களை மேற்கொண்ட போதிலும் வடபகுதியில் அமைக்கப்பட்டுள்ள முக்கிய இராணுவ முகாம்கள் உட்பட வடக்குக் கிழக்கில் அமைந்துள்ள அனைத்து முகாம்களுக்கும் தேவையான உணவுப் பொருள்கள், ஆயுதங்கள் மற்றும் தேவையான அனைத்தையும் குறைவின்றி விநியோகிக்க அரசு ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளதாக அனுரத்த ரத்வத்தை தெரிவித்தார்.

வடபகுதியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் முகாம்கள் மீது ''சுப்பர் சொனிக்'' விமானம் மூலம் கடுந்தாக்குதலை அரசின் பாதுகாப்புப் பிரிவுமேற்கொண்டுவருவதாகவும் ரத்வத்தை தெரிவித்தார். [ஐ-10]

லீவில் சென்ற படையினர் கடமைக்கு திரும்பவில்லை

கொழும்பு,மே 18

சொந்தக் காரணங்களுக்காக விடுமுறையில் சென்ற இராணுவத்தைச் சேர்ந்த இளநிலை அதிகாரிகள் பலர் மீண்டும் பணிக்குத் திரும்பவில்லை 'என்று தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு விடுமுறையில் சென்ற யுத்தப் பிரதேசங்களில் கடமையாற்றும் படையினரை அண்மையில் உள்ள இராணுவ முகாம்களில் தமது வருகையை பதிவு செய்யுமாறு பணிக்கப்பட்டுள்ளது.

எனினும் அவ்வாறு படையினர் எவரும் தம்மை பதிவு செய்யவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீண்டும் யுத்தம் ஏற்பட்டதை அடுத்து படையினர் தமது பணிக்குத் திருப்ப தயக்கம் காட்டி வருகின்றனர். (ஐ-10]

புலிகளின் குரல் வானொலியில்

18 05 1995 வியாழன் இரவு

- ★ 8-02 — சொல்லுங்கள் பார்க்கலாம்
- ★ 8-10 — சித்தமருத்துவ குறிப்புகள்
- ★ 8-20 — உழைப்போம் உயர்வோம் 'பாவனை நீரை பயனுள்ளதாக்குவோம்' குறுநாடகம்
- ★ 8-30— செய்திகள்
- ★ 8-40 — மொழியும் வாழ்வும்
- ★ 8-50 — எங்களின் தேசம்

19 — 05 — 1995 வெள்ளி காலை

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7-15 — மணியாரம்
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — தாயகப்பாடல்கள்

தமிழீழ வானொலியில்

வியாழன் மாலை

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிகீதம்
- ★ 5-10 புதியவை
- ★ 5-15 — மழலைகளுக்காக
- ★ 5-30 — இசையும் கதையும்
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
- ★ 6-02 — பொன் விளை பூமி
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 — கேள்வி -பதில் —விளையாட்டுதொடர் பானவை

மற்றொரு கறுப்பு ஜூலையை ஏற்படுத்த வகுப்புவாத சக்திகள் முயற்சி செய்கின்றன

எரிகிற தீயில் எண்ணெய் ஊற்றும் தென்னிலங்கைப் பத்திரிகைகள்

தற்போது நாட்டில் உருவாகியுள்ள நிலைமையைச் சாதகமாகப் பயன்படுத்தி சந்தர்ப்பவாதிகள் இனககலவரத்தை உருவாக்கக் கூடும். சில பத்திரிகைகளும் வகுப்புவாதத் தீயை வளர்க்க முயலுகின்றன. இது குறித்து வெளியான ''ராவய'' பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தின தமிழாககம்.

மீண்டும் ஒருமுறை நாட்டில் கறுப்பு ஜூலையை உருவாக்கும் தீய நோக்குடன் சில வகுப்புவாத சக்திகள் செயற்பட்டுவருவது தெளிவாகத் தெரிகிறது.

சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந்து விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டுவரும் இச்சந்தர்ப்பத்தில் நாட்டில் நிச்சயமற்ற தன்மை உருவாவது இயற்கையே.

இருப்பினும் மீண்டும் இனவாத இரத்த ஆறு ஓடுவதற்கு இந்த நிலைமையை சந்தர்ப்பமாகப் பயன்படுத்த எவருக்கும் வாய்ப்பளிக்கக் கூடாது.

இரத்த களரியை தடுக்கும் ஆற்றல் கிடையாது

ஸ்ரீலங்காவில் ஏற்கனவே பெருமளவு இரத்தம் சிந்தப்பட்டுவிட்டது. இரத்த ஆறு ஓடுவதை முற்றிலுமாகத் தடுக்கக்கூடிய ஆற்றல் நாட்டிற்கு இல்லை.

ஆனாலும் தற்போது தோன்றியுள்ள நிலைமையை பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவேண்டுமே ஒழிய அதை வளரவிட எதுவித உற்சாகமும் அளிக்கப்படக் கூடாது.

1983 ஜூலைச் சம்பவங்களால் நாட்டிற்கு ஏற்பட்ட நட்டம் [illegible] அந்தச் சம்பவங்கள் நாட்டின் முன்னேற்றத் [illegible] தாண்டுகளுக்குப் பின்தள்ள காரணமாக அமைந்தன.

1983 ஜூலைச் சம்பவங்கள் தமிழ் சிங்கள மக்களிடையே பிரிவினைத் தீயை வளர்த்து ஒரு துர்ப்பாக்கிய நிலைமையை உருவாக்கியதுடன் தமிழ் மக்களால் புறக்கணிக்கப்பட்ட ஆயுதக் குழுக்களுக்குப் புதிய வலுவை அளித்ததுடன் அவற்றை தமிழ் மக்கள் ஆதரிக்கும் நிலைமையையும் உருவாக்கின.

1983இல் இடம்பெற்ற சம்பவங்களை ஒத்த சம்பவங்கள் மீண்டும் ஏற்படுமாயின் நாட்டில் மிகவும் துன்பகரமான நிலை உருவாவதைத் தடுக்க முடியாது.

தீர்வு காண்பது இலகுவல்ல

நாட்டில் உருவாகியுள்ள தேசியப் பிரச்சினைக்கு தீர்வினைக் காண்பது இலகுவான காரியமல்ல என்பது உண்மையே.

இருப்பினும் பைத்தியத்தனமாகச் செயற்படுவது [illegible] தாது.

[illegible] பைத்தியம்பிடித்துச் செயற்பட முற்படுமேயாயின் நாட்டில் இரத்த ஆறு ஓடுவதையும் நாட்டுக்கு ஒரு துர்ப்பாக்கிய நிலை உருவாவதையும் தடுக்க முடியாது.

அவ்வாறான ஒரு துர்ப்பாக்கிய நிலை உருவாகாமல் தடுப்பது சமூகங்களின் கடமையாகும். அதேபோல அரசாங்கத்தின் முக்கிய பொறுப்புமாகும்.

குறிப்பாக சில பத்திரிகைகள் தற்போது செயற்பட்டு வரும் விதம் மிகவும் கண்டிக்கப்படவேண்டிய ஒன்றாகும். எரிகிற தீயில் எண்ணெய்யை ஊற்றுவது போன்ற செயல்களில் ஈடுபடும் இப்பத்திரிகைகள் மீண்டும் இந்நாட்டில் இரத்த ஆறு ஓடவேண்டும் என்ற நோக்குடன் செயற்படுகின்றன போல் தெரிகிறது.

குறுகிய அரசியல் நோக்கங்கள்

இந்தக் கெட்ட நடவடிக்கைகளின் பின்னணியில் குறுகிய அரசியல் நோக்கங்களும் மறைந்திருப்பது தெரிகிறது.

கடந்த பொதுத் தேர்தலின்போது ஆட்சிமாற்றம் ஏற்படுவதைத் தடுப்பதற்கு தங்கள் முழு ஆற்றலையும் பயன்படுத்திச் செயற்பட்ட சில சக்திகள் தற்போது தமது தீய நோக்கத்தை இச்சந்தர்ப்பத்தில் நிறைவேற்றக் காத்திருப்பது கண்கூடு.

எரியும் தீயில் எண்ணெய் ஊற்றி இரத்தக்களரியை ஏற்படுத்தக்கூடிய பின்னணியை உருவாக்கி, அதனால் ஏற்படவுள்ள கெட்ட பெயரை அரசுமீது சுமத்தி, அரசுக்குப் பிரச்சினைகளைத் தோற்றுவித்து தமது முன்னைய அரசியல் எஜமான்களை மீண்டும் அரசகட்டில் ஏற்றுவதே தீய சக்திகளின் தேவை எனத் தெரிகிறது.

சேற்று நீரில் மீன்பிடிக்கக் காத்திருக்கும் இவ்வாறான தீய சக்திகளின் குறுகிய நோக்கங்கள் நிறைவேறாமல் தடுப்பது சமூகத்தினதும் அரசினதும் கடமையாகும். [இ-10]

தமிழ் பிரதேசத்தின் எல்லைகளை மீளவரையறை செய்து தீர்வு

சந்திரிகா தெரிவிப்பு

கொழும்பு, மே 18

தமிழ்ப் பிரதேசங்களின் எல்லைகளை மீளவரையறை செய்து—

ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்கள் ஏற்கக் கூடியதான தீர்வுத் திட்டத்தை இரண்டு வாரங்களுக்குள் வெளியிடுவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உறுதியளித்திருக்கிறார்.

நேற்று தம்மைச் சந்தித்துப் பேச்சு நடத்திய தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளிடமே அவர் இந்த உறுதிமொழியை வெளியிட்டார்.

ஈ. பி. ஆர். எல். எவ்., புளொட், ஈ. பி. டி. பி., இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி ஆகியவற்றின் பிரதிநிதிகளே ஜனாதிபதியைச் நேற்றுச் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பின் போது பின்வரும் விடயங்கள் ஆராயப்பட்டு இணக்கம் காணப்பட்டதாகக் கூறப்பட்டது:-

★ தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்க்கும்படியும், அரசின் அரசியல் தீர்வுத் திட்டத்தை உடனடியாக வெளியிடும்படியும் தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகள் வற்புறுத்தினர்.

★ வடக்கு - கிழக்கு மீனவரை கடலில் மீன் பிடிக்க அனுமதிப்பது குறித்து படையினருடன் கலந்தாலோசித்து முடிவை விரைவில் அறிவிப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அதுவரை அந்த மீனவர்களுக்கு உலர் உணவு நிவாரணம் வழங்க ஜனாதிபதி இணங்கினார்

★ கிளாலிப் பாதையை உத்தியோகபூர்வமாகத் திறந்து விட வேண்டும் என்ற கோரிக்கை குறித்து விரைவில் தீர்வு காணப்படும் என்றார் ஜனாதிபதி

★ வடபகுதிக்கு பொருள்களை எடுத்துச் செல்ல முடியாத நிலையில் வவுனியாவில் 250 லொறிகள் தடுத்து வைக்கப்பட்டிருப்பது பற்றி ஜனாதிபதிக்கு முறையிடப்பட்டது.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சரை உடனடியாக வவுனியாவிற்கு அனுப்பி இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாகச் சொன்னார் ஜனாதிபதி.

★ வடக்குக்கு பொருள்களை தடையின்றி அனுப்புவது குறித்து இராணுவத்துடன் கதைத்து இரு வாரங்களுக்குள் உறுதியான பதில் தருவதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

★ தமிழர்கள் வகை, தொகையின்றிக் கைது செய்யப்படுவது குறித்தும் தமிழர் படையினரால் துன்புறுத்தப்படுவது குறித்தும் விசாரிக்க மனித உரிமை செயலணிக் குழுக்களை நியமிப்பதற்கு ஜனாதிபதி இணங்கினார்.

அந்த வகையில் —

ஒவ்வொரு கட்சியிலிருந்தும் ஒவ்வொருவரை செயலணிக் குழுவுக்குச் சேர்த்துக் கொள்வது என்றும் —

இதற்கு மேலதிகமாக அந்தந்தக் கிராமத்தில் அல்லது நகரத்தில உள்ளவர்களை உள்ளடக்கியதாக மேலதிக செயலணிக் குழுக்கள் இயங்கும் என்றும் —

ஜனாதிபதி தெரிவித்தார்.

(உ-4-6)

மரண அறிவித்தல்கள்

திருமதி
சிதம்பரப்பிள்ளை நாகம்மா

காரைநகர் சிவன்கோவிலடியைப் பிறப்பிடமாகவும், தற்பொழுது கொக்குவில் கிழக்கு சம்பியன்லேனை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி சிதம்பரப்பிள்ளை நாகம்மா 17-5-95 இல் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற ஆசைப்பிள்ளை சிதம்பரப்பிள்ளையின் அன்பு மனைவியும், சிவஞானம், சிவயோகம், சிவநாதன் சுவிஸ்), சிவலிங்கம் (சாந்தி ஸ்ரோர்ஸ், ஒட்டுசுட்டான்), சிவசோதி ஆகியோரின் அன்புத் தாயாரும், இராசதுரை (ராஜா ஸ்ரோர்ஸ், ஒட்டுசுட்டான்), சிவசண்முகநாதன் (லக்கி ஸ்ரோர்ஸ், ஒட்டுசுட்டான்), சரோஜினிதேவி S. P S ரான்ஸ்போட், சகோதரி), ஜீவமணி, அருள்பிரகாசம் (இலங்கையன் பதிப்பகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், தெய்வநாயகி, லோகநாதன், லோகராணி (உதயன் பணிமனை, யாழ்ப்பாணம்), தனலட்சுமி, யோகமலர், சிவறஞ்சன் (கனடா), சிவதர்சன் கனடா), சிவதர்சினி, சிவமதன், சிவகலா, சாயிபவன், கலைச்செல்வன், அருட்செல்வன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியை இன்று (18-5-95) வியாழக்கிழமை காலை 10 00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்தில நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. சிவலிங்கம்
(மகன்)

இல 90, சம்பியன் லேன்,
கொக்குவில் கிழக்கு
(36693)

உயர்திரு
சுப்பிரமணியம் இரத்தினசபாபதி
M Sc.

(முன்னாள் அதிபர் ஹாட்லிக் கல்லூரி,
முன்னாள் அதிபர் நெல்லியடி
மத்திய மகா வித்தியாலயம்கரவெட்டி)

அவர்கள் 17-05-1995 அமரத்துவம் எய்தி விட்டார்.

அன்னாரின் வேண்டுகோளுக்கிணங்க அவரது புகழுடம்பு யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடதில் 17-05-95 பிற்பகல் ஒப்படைக்கப்பட்டது.

திருமதி ச. மனோரஞ்சிதபூசனி,
(சகோதரி)
புலோலி மேற்கு. பருத்தித்துறை.
(8545)

இ. இரட்ணகோபால
[பாலர் கல்விக்கழக செயலாளர்]

சுருவிலூரைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இ. இரட்ணகோபால் காலமாகிவிட்டார்.

அன்னார் தெய்வநாயகியின் (ஆசிரியை, கொட்டடி நமசிவாய வித்தியாசாலை, முன்னாள் ஆசிரியை, இணுவில் இந்துக்கல்லூரி, தாவடி த. க. பாடசாலை) அன்புக் கணவரும், கமலாதேவி, பேரின்பநாயகம் (U K.), திருமகள் - திருநாவுக்கரசு, காலஞ்சென்ற சுந்தரி - பாஸ்கரன், பவானி ரவீந்திரன் [U K.] ஆகியோரின் அன்புச் சகோதரரும், பேரின்பநாயகம் (U K.), திருநாவுக்கரசு (முன்னாள் முகாமையாளர் மருந்துக் கூட்டுத்தாபனம்), ரவீந்திரன் (U K], சுந்தரலிங்கம் [உ-க-ப வல]), பாஸ்கரன், பராசக்தி, பாலகிருஷ்ணன் [பாலா இநப்பகம்] விமலாதேவி, பாலேந்திரா [ஆசிரியர், இராமநாதன் கல்லூரி], பாலச்சந்திரன் [கல்கி ரேடஸ், கொழும்பு] ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று [18 5 95) வியாழன் இல 49/5, யாழ்வீதி, யாழ்ப்பாணம் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10-00 மணிக்கு கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்,

தகவல்:
திருமதி தெ. இரட்ணகோபால்
(மனைவி)

49/5, யாழ்வீதி,
யாழ்ப்பாணம்
[36686]

திருமதி
தங்கம்மா மார்க்கண்டு

திருமதி தங்கம்மா மார்க்கண்டு நேற்றுக் காலமானார். இவர் காலஞ்சென்ற சி. மார்க்கண்டு [முன்னாள் வர்த்தகர் மனோன்மணி ஸ்ரோர்ஸ், கொல்லாவல] அவர்களின் அன்பு மனைவியும், அமரர் இரத்தினம் [நீர் அளவைப்பகுதி], கோபாலகிருஷ்ணன் [வர்த்தகர்], மனோன்மணி, பாக்கியலட்சுமி, [அதிபர், கோண்டாவில் இந்து ம. வி.], போகம்மா, இராசலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும், துரைராசா, தனலட்சுமி ஆகியோரின் மாமியாரும், ரவீந்திரன், ரவிச்சந்திரன், ரவிசரன், துஷ்யந்தினி, தமயந்தினி, ரவிதீபன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் மயானத்தில் தகனம் செய்யப்படும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்,
மா. கோபாலகிருஷ்ணன்
(மகன்)

குமரகோட்டம்,
கோண்டாவில்.
[36698]

இராணுவ...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதற்கிடையில்—

கொத்தலாவலை பாதுகாப்புப் பயிற்சிக் கல்லூரியைச் சேர்ந்த அதிகாரிகள் பலர், நீண்ட வெசாக் விடுமுறைக்காக வீடுகளுக்குச் சென்ற பின்னர் கடமைக்குத் திரும்பவில்லை என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்கள் தொடர்ந்து பணிக்குத் திரும்பாவிட்டால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

[உ-ஐ 4-6]

விடுதலைப...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யுளது எனவும் —

இதே பத்கோபந்து வட்டாரங்கள் தெரிவித்தன.

நீர்மூழ்கிக் கப்பல் பருத்தித்துறையிலிருந்து ஒரு பரிசோதனை ஓட்டத்தில் சென்றிருக்கவேண்டும் என்று கருதப்படுகிறது. பருத்தித்துறை கடற்புலிகளின் தலைமையகம் அமைந்திருக்கும் இடம்.

— இவ்வாறு 'தஐலண்ட்' செய்தி மேலும் தெரிவித்தது.

[உ-க]

யாழ்.
பல்கலைக்கழகத்தில்
நேற்று
நாளை
எதிர்பாருங்கள்
[36700]

வடமராட்சி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வன், வல்லைவெளி, தொண்டமானாறு, கெருடாவில், கம்பர்மலை, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை, மயிலியதனை, ஊரிக்காடு, அல்வாய் உட்பட பல்வேறு இடங்களில் பரவலாகப் படையினரின் ஷெல்கள் நேற்று விழுந்து வெடித்தன.

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயச் சுற்றாடலில் விழுந்து வெடித்த ஷெல்லினால் ஆலய மடத்திலிருந்த ஐந்து வயோதிபர் காயமடைந்தனர்.

ஆலயப் பூசகரின் குடும்பத்தைச் சேர்ந்த திருமதி தங்கராசா இராசமணி(வயது 61), மற்றும் கந்தன் வேலுப்பிள்ளை (வயது 60), நாகலிங்கம் கந்தையா [வயது60], வேலுப்பிள்ளை இராமலிங்கம் (வயது 71), அப்பாத்துரை நாகரத்தினம் (வயது 61] ஆகிய ஐவருமே காயமுற்றவர். இவர்களில் ஒருவரின் கால் ஷெல்லினால் துண்டிக்கப்பட்டுள்ளது.

இந்த ஐவரும் மற்றும் உடுப்பிட்டி பொக்கணையில் விழுந்த ஷெல்லினால் காயமுற்ற ஆர். சின்னத்துரை (வயது 76) என்பவரும் மந்திகை ஆஸ்பத்திரியில் தற்போது சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

உடுப்பிட்டியில்

உடுப்பிட்டியில் விழுந்த ஷெல்லினால எஸ். விஜிதரன் (வயது 6), வி. சுஜாதா (வயது 9) ஆகிய இரு சிறார்களும் காயமுற்றனர். இவர்கள் இருவரும் வல்லை இந்திராணி ஆஸ்பத்திரியில் தற்போது சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

அச்சுவேலி வடக்கு உலவிக்குளம் பிள்ளையார் கோயில் பகுதியில் விழுந்த ஷெல்லினால் செல்வநாயகம் கவிதா [வயது 18] என்ற யுவதி காயமடைந்தார்

அச்சுவேலி வடக்கில் ஷெல்லுக்குப் பயந்து தனது வீட்டிலிருந்து பாதுகாப்புத் தேடி அடுத்த வீட்டுக்கு ஓடிய முருகேசு சிவக்கொழுந்து [வயது 45] என்பவர் அடுத்த வீட்டிலிருந்தபோது ஷெல்லினால் காயமுற்றார்.

இவர்கள் இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த ஷெல் தாக்குதல்களை அடுத்து அச்சுவேலிப் பகுதியைச் சேர்ந்த மக்கள் புத்தூர், நீர்வேலிப் பகுதிகளை நோக்கியும்—

தொண்டமானாறுப் பகுதியைச் சேர்ந்த மக்கள் உடுப்பிட்டிப் பகுதிகளை நோக்கியும் இடம்பெயர்ந்தனர்.

(உ-4-11-13-15 118-155-173)

பிரபாவைக...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பரிசீலித்து வருவதாகவும் அமைச்சர் எழுத்து மூலமான பதிலில் தெரிவித்தார்.

பிரபாகரனைக் கைது செய்யுமாறு கடந்த வருடமே "இன்ரர்போல்" அமைப்பிடம் கேட்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

[அ-4]

தமிழர்களின ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர் இதில் தமிழர் ஒருவர் காயமடைந்தார்

தொடர்ந்து இரு தமிழ் மாணவர்களை விசேட அதிரடிப் படையினர் சுட்டுக் காயப்படுத்தினர். இசன்பேன் இன்ஸ்பெக்டர் ஏற்றக்கிலுள்ள தமிழர்கள் அனைவரையும் உடைமைகள் எதனையும் எடுக்காது வெளியேறுமாறு அதிரடிப்படையினர் கட்டளையிட்டனர்.

தமிழர்கள் வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டபின் அவர்களது வீடுகளும் உடைமைகளும் முற்றாக எரித்து அழிக்கப்பட்டன அத்துடன் அத்தமிழர்களும் மிக மோசமாகத் தாக்கப்பட்டனர்.

1990 இல் இன்ஸ்பெக்டர் ஏற்றத்திலிருந்து இடம்பெயர்ந்து அண்மையில் மீளக் குடியமர்ந்தவர்களே தற்போது தமது வீடுகள், உடைமைகளை இழந்துள்ளனர்.

இவர்கள் கோமரி திருக்கோயில் பகுதிகளில் தற்போது அகதிகளாகத் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தின் போது பொதுமக்கள் சிலரை வீட்டுக்குள் விட்டு படையினர் வீடுகளைக் கொளுத்தியதாகவும்—

இதனால் தீக்காயங்களுக்கு உள்ளான சிலர் சிகிச்சை பெற்று வருவதாகவும்—

சிலர் மீது அசிட் திரவகம் வீசப்பட்டதாகவும் மற்றொரு தகவல் தெரிவிக்கிறது.

(உ-4)

தமிழகத்தில் வைத்து பிரபாகரனை தொண்டா புகழ்ந்ததால் சர்ச்சை!

சென்னை, மே. 18

புகழ்பெற்ற இந்திய சுதந்திரப் போராட்ட வீரர் பகத்சிங் குடன் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனை ஒப்பிட்டு மதுரை செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் தொண்டமான் வெளியிட்டிருக்கும் கருத்து தமிழகத்தில் பலத்த சர்ச்சையை உருவாக்கியிருக்கிறது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கை விசாரித்து வரும் நீதிமன்றம் ஒரு முடிவுக்கு வரும் வரை விடுதலைப்புலிகளின் தலைவரை குற்றவாளி என்று குறிப்பிடக்கூடாது என்றார் அமைச்சர் தொண்டமான்.

பிரபாகரன் இந்தியாவில் தான் ஆயுதப் பயிற்சி பெற்றார். முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியும் அவரது வெளியுறவு அமைச்சராக இருந்த தற்போதைய பிரதமர்— நரசிம்மராவும் பிரபாகரனுக்கு ஒரு காலத்தில் பெரும் வரவேற்பு அளித்தவர்கள்.

விடுதலைப் புலிகளின் தலைவரை இந்தியர்கள் வேறு கண்ணோட்டத்தில் பார்த்தாலும் நான் அவரை இலங்கைத் தமிழரின் உரிமைகளுக்காகப் போராடுபவராகவேபார்க்கிறேன்.

இலங்கையில் அமைதியையோ அல்லது புரிந்துணர்வையோ பிரபாகரன் ஒருவரால் தான் கொண்டுவர முடியும் என்று சந்திரிகா அரசும் ஒப்புக் கொண்டிருக்கிறது.

—இவ்வாறு தொண்டமான் வெளியிட்ட கருத்துக்களே சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கின்றன.

அமைதியை ஏற்படுத்த சந்திரிகா எடுக்கும் முயற்சிகள் வெற்றியளிக்கும் என்று நம்பிக்கை வெளியிட்ட அவர், இந்திய இராணுவம் இந்த விவகாரத்தில் தலையிட்டால் அது இலங்கைத் தமிழரின் அழிவில்தான் போய் முடியும் என்றார்.

(உ-4)

தொண்டா செல்லும் இடமெங்கும் கறுப்புக் கொடி காட்ட முஸ்தீபு!

சென்னை, மே 15

தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனைப் புகழ்ந்து பேசியதற்காக அமைச்சர் தொண்டமான் அடுத்தமுறை தமிழகம் வரும் போது மாநிலத்தில் அவர் செல்லுகின்ற இடமெல்லாம் தமது கட்சித் தொண்டர்கள் கறுப்புக் கொடி காட்டுவார்கள் என தமிழக இளைஞர் காங்கிரஸ் தலைவர் டாக்டர் ஏ. செல்லக்குமார் அறிவித்தார்.

"ராஜீவ் காந்தியைக் கொன்றதற்காகக் குற்றம் சாட்டப்பட்டவரைப் புகழ்ந்ததன் மூலம் தொண்டமான் இந்தியர்களின் உள்ளங்களைப் புண்படுத்தியுள்ளார்

"தொண்டமானின் கருத்துக்கள் கண்டனத்துக்குரியவை. அவர் இவ்வாறு கருத்துத் தெரிவிக்கக் காரணமாக இருப்பவை எவை என்பதையும் ராஜீவ் காந்தி கொலைக்கும் தொண்டமானுக்கும் தொடர்பு இருக்குமா என்பதையும் மத்திய அரசு ஆராய வேண்டும்" — என்றார் டாக்டர் செல்லக்குமார்.

தொண்டமான் கூறிய கருத்துக்காக கண்டனம் தெரிவித்த காங்கிரஸின் முன்னாள் தமிழகத் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி இத்தகைய கருத்தைத் தெரிவித்ததன் மூலம் இலங்கை அமைச்சர் ராஜீய உறவு முறைகளை மீறிவிட்டார் என்றார்.

தொண்டமான் தன் தேவைகளுக்கு ஏற்ப தன் கருத்தை மாற்றிக்கொள்பவர் எனக் குறைகூறினார் வாழப்பாடி.

தொண்டமானின் கருத்துக்கு நேற்று இந்திய ராஜ்ய சபையிலும் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் கண்டனம் தெரிவித்தனர்.

(உ-4)

உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், மே 18

வலிகிழக்கு உதைபந்தாட்டச் சங்கம் இணைந்துள்ள கழகங்களுக்கு இடையில் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் சென். அன்ரனீஸ் மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3 00 மணி:- பாரதி எதிர் கலைவாணி

★ 4. 00 மணி:- சென். சிசிலஸ் எதிர் தொய்யாத் தோட்டம்

★ 5 00 மணி:. அரியாலை எதிர் பொற்பதி

(உ)

வல்வைக..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காங்கேசன்துறை சென்றது.

அக்கப்பலில் விடுதலை செய்யப்பட்ட இரு மீனவர்களும். அவர்களது படகும், இரு இயந்திரங்களும், வலைகளும காங்கேசன்துறையில் வைத்து ஏற்றப்பட்டு, கப்பல் பருத்தித்துறைக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டது.

அதன் பின்னரே பயணிகளும், விடுதலையான மீனவர்களுடன் கப்பலிலிருந்து இறக்கப்பட்டனர்.

[உ-173-118]

பீடாதிபதியின...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாதம் செய்வதறியாது திகைப்புற்று நிற்கிறது. எம்மை எதிர்கொண்டு எமது மக்களை அழித்தொழிக்கும் நோக்குடன் பேரினவாத சக்திகள் சகலதும் ஒன்று சேரும் முயற்சியில் இறங்கியுள்ளன. இதை நாம் அலட்சியம் செய்துவிட முடியாது.

இந்நிலையில் விடுதலைக்காகப் போராடும் மக்களாகிய நாம் சகல மட்டங்களிலும் ஒன்று சேர்ந்து ஒருமித்த கருத்துடன் ஒரே அணியில் நின்று போராட வேண்டிய வரலாற்றுச் சூழ்நிலையில் உள்ளோம்.

இன்று பலவித சுகபோகங்கள் அனுபவிக்கக் கூடிய வசதிகள் இருந்தும் அவற்றிற்கப்பால் — தேசநலத்திற்காக — சமூக நலத்திற்காக — விடுதலைக்காகப் போராடும் மக்களின் நலத்திற்காக — எமது மண்ணிலேயே நற்பணியாற்றும் நல்ல கல்விமான்கள், அறிவுஜீவிகள் பலரை நாம் பெற்றுள்ளோம்.

இவ்வாறான மனிதர்களில் ஒருவரே யாழ் பல்கலைக்கழகத்தின் மருத்துவத்துறை பீடாதிபதியும் ஆவார்.

நேற்று முன்தினம் இவரது வீட்டின் மீது சில நபர்கள் கல் வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். அது எமது மனதைப் புண்படுத்தும் செயலாகும். மிகவும் அநாகரிகமானதும் மனிதநேயமற்றதுமான செயலாகவே இதை நாம் பார்க்க வேண்டியுள்ளது உன்னதமான சமுதாய அமைப்பைக் கட்டியெழுப்புவதற்காகப் போராடும் நாம் இவ்வாறான அடாவடித்தனங்களை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. இச்செயலைப் புரிந்தவர்கள் மீதும்இது போன்ற செயலைப் புரிபவர்கள் மீதும் நடவடிக்கையெடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

திருமண அழைப்பு

மணமகன்:- திருநிறை செல்வன்

சிவசுப்பிரமணியம் ஞானாகரன்
[சத்யா]

மணமகள்:- திருநிறை செல்வி

கணபதிப்பிள்ளை வித்தியதர்சினி

காலம்:- நாளை வெள்ளிக்கிழமை
காலை 9-50 மணி முதல் 10-20 மணி வரை

இடம்:- மணமகள் இல்லம்
[ஞானபாஸ்கரோதயா சங்க வீதி, கிராம சேவையாளர் அலுவலக ஒழுங்கை, கல்வியங்காடு]

வரவேற்புபசாரம்:- நாளை மறுதினம்
பிற்பகல் 3.00 மணி முதல் மணமகன் இல்லத்தில்
[46, தபால் அலுவலக வீதி, கோப்பாய் தெற்கு]

✶ அனைவரும் வருக ✶

[சி/1229]

5ஆம் ஆண்டு
நினைவலைகள்

அன்னை மடியில்:
05
—
02
—
1969

ஆண்டவன் அடியில்;
14
—
05
—
1990

செல்வி குலசிங்கம் தனலஷ்மி

திதி: இன்று 18-05-1995

எம் இனிய அன்பு மகளே!
பெற்றெடுத்த தாய் மனம் - இங்கு
வேதனையில் துடிக்கிறது - நீ
பேணிய நற் தந்தையோ - இங்கு
உனை இழந்து தவிக்கிறார் - உன் பிரிவால்
அண்ணனோ அந்நிய தேசத்தில்
தேற்றுவார் இன்றி தேம்பியே அழுகின்றான் - உன்
தம்பியோ அக்கா எனையிழந்தாள் எனக் கதறுகிறான்
- உன்

கண்ணான சோதரியோ - தன்னோடு
உறவாடிய நின் பிரிவெண்ணி
நாளெலாம் கலங்கி நிற்கின்றாள் - சோதரியே
பாச உறவுதான் எமையெல்லாம் வாட்டி வதைக்கிறதே
எம் இல்லமிங்கே வெறிச்சோடிக் கிடக்கிறதே
மகளே! சோதரியே!! - நின்
ஆத்மா சாந்தியடைய நித்தமும் இறைவனை
இறைஞ்சிடும்.

அன்பு நெஞ்சங்கள்
தாய் தந்தை, அண்ணன்,
தம்பி, தங்கை,

510, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(மனோகரா தியேட்டர் முன்பாக)
(36673)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 18-05-1995 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.